Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 176 07.02.2026 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 176 Saturday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(7–02–2026)
விசுவாவசு ஆண்டு, தை–24
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி நாளை
விடியற்காலை 5.13 வரை
பிறகு சப்தமி.
நட்சத்திரம்:
சித்திரை நாளை
பிறகு சுவாதி விடியற்காலை
4.53 வரை
யோகம்
மரண/அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை: 9.00–10.30 மணி.
எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | ஆக்கம் |
| ரிஷபம் | அமைதி |
| மிதுனம் | இரக்கம் |
| கடகம் | மாற்றம் |
| சிம்மம் | மகிழ்ச்சி |
| கன்னி | பொறுமை |
| துலாம் | போட்டி |
| விருச்சிகம் | புகழ் |
| தனுசு | உயர்வு |
| மகரம் | நலம் |
| கும்பம் | தெளிவு |
| மீனம் | நற்செயல் |

# ரூ.85 லட்சத்தில் கார்ல் மார்க்ஸ் சிலை: முதல்வர் ஸ்டாலின் திறப்பு!

**சென்னை,பிப்.7:**

சென்னை, கன்னிமாரா பொது நூலகம், எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மாமேதை கார்ல் மார்க்ஸின் திருவுருவச் சிலையினை முதல்வர் ஸ்டாலின் நேற்று (பிப். 6) திறந்துவைத்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ரூ. 85 லட்சம் மதிப்பீட்டில் கார்ல் மார்க்ஸ் சிலை நிறுவப்பட்டுள்ளது.



### கார்ல் மார்க்ஸ் வரலாறு

கார்ல் மார்க்ஸ் ஜெர்மனி, புருசியாவில் உள்ள ட்ரையர் நகரில், 5.5.1818 அன்று பிறந்தார். இவர் ஒரு ஜெர்மானிய தத்துவஞானி, புரட்சிகர, பொருளாதார நிபுணர் மற்றும் வரலாற்றாசிரியர் ஆவார்.

பெர்லின் பல்கலைக்கழகத்தில் வரலாறு, மெய்யியல் ஆகிய துறைகளில் பயின்ற கார்ல் மார்க்ஸ் 1841 இல் யெனா பல்கலைக்கழகத்தில் மெய்யியலுக்கான முனைவர் பட்டம் பெற்றார்.

1841இல் பட்டம் பெற்ற மாமேதை கார்ல் மார்க்ஸ், சில காலம் இதழியல் துறையில் பணிபுரிந்தார். தீவிர அரசியல் கருத்துகளின் விளைவாக ஜெர்மனியை விட்டு வெளியேறி பாரிசு நகரம் சென்றார். 1847இல் தத்துவத்தின் வறுமை (The Poverty of Philosophy) என்னும் முதல் நூலை வெளியிட்டார்.

மாமேதை கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கல்சுடன் இணைந்து 1848 ஆம் ஆண்டு "பொதுவுடைமை அறிக்கை (The Communist Manifesto)" எனும் நூலை வெளியிட்டார். ஒரு தொழிலாளி ஏன் தொழிலாளியாக மேலும் மேலும் ஏழையாகிறார், ஒரு முதலாளி மேலும் மேலும் பணம் சேர்த்து ஏன் பணக்காரராகிறார் என்பதை அறிவியல் பூர்வமாக இந்நூலில் விளக்கி எடுத்துரைத்தார்.

உலகத் தொழிலாளர்கள் அனைவரது மனத்திலும் மார்க்ஸுக்கென்று ஓர் நிரந்தர இடத்தை இந்நூல் அவருக்கு உருவாக்கிப் பெருமை சேர்த்தது.

1867ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ் தாஸ் கேபிடல் (மூலதனம்) நூலின் முதல் தொகுதியும், பின்னர் அவரது மனைவி அவர்களால் மூலதன நூலின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகள் வெளியிடப்பட்டது. இன்றைய பொருளாதார அமைப்பு எப்படி இயங்குகிறது என்பதை இந்நூலில் விவரித்துள்ளார்.

மாமேதை கார்ல் மார்க்ஸின் மார்க்ஸியம் கோட்பாடுகள் இந்த மண்ணுலகில் மனிதர்கள் மனிதர்களால் வாழ்வதற்கு வழிகாட்ட முனையும் ஒரு தத்துவக் கோட்பாடு ஆகும் எனக் கூறியுள்ளார். "என்றும் நினைவில் கொள், ஒரு மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது" என்று கூறிய மாமேதை கார்ல் மார்க்ஸின் சித்தாந்தங்கள், இன்று வரை உயிர்ப்புடன் இருக்கின்றன.

உலகளவில் சமூக மற்றும் பொருளாதாரச் சிந்தனைக்குப் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திய மாமேதை கார்ல் மார்க்ஸ் 14.3.1883 அன்று மறைந்தார்.

கார்ல் மார்க்ஸ் அவர்களின் பொருளாதாரச் சிந்தனைகளை மக்கள் அனைவரும் அறிந்திடும் வகையிலும், அன்னாரது புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலும் தமிழ்நாடு முதலல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் சென்னையில் அவருக்குப் புதிதாகத் திருவுருவச் சிலை நிறுவப்படும் என அறிவித்தார்.

அந்த அறிவிப்பின் பயனாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று சென்னை, எழும்பூரில் உள்ள கன்னிமாரா பொது நூலகம், அருங்காட்சியக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மாமேதை கார்ல் மார்க்ஸின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டணி கட்சி தலைவர்களான செல்வப்பெருந்தகை, வைகோ, வீரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அப்போது கார்ல் மார்க்ஸ் சிலைக்கு முன்பாக கூட்டணி கட்சி தலைவர்களுக்கு மத்தியில் 'கார்ல் மார்க்ஸ்சுக்கு வீரவணக்கம்' என்று முழக்கமிட்டார். மேலும் இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, மேயர் பிரியா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# விஜய்க்கு விதிக்கப்பட்ட ரூ.1.50 கோடி அபராதம் செல்லும்: சென்னை ஐகோர்ட் அதிரடி

**சென்னை,பிப்.7:**





நடிகர் விஜய் வீட்டிலும், அலுவலகத்திலும் கடந்த 2015-ம் ஆண்டு வருமான வரித்துறை திடீர் சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்தநிலையில், கடந்த 2015-2016-ம் நிதியாண்டிற்கான வருமானம் 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் என்று விஜய் கணக்கு காட்டியிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித்துறை அதிகாரிகள், 2015-ம் ஆண்டு கைப்பற்றிய ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது, புலி திரைப் படத்தில் நடிப்பதற்காக அவர் பெற்ற ரூ.15 கோடியை கணக்கில் காட்டவில்லை என்று கண்டுபிடித்தனர். இவ்வாறு வருமானத்தை மறைத்ததற்காக விஜய்க்கு ரூ.1 கோடியே 50 லட்சத்தை அபராதம் விதித்து கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் 30-ந்தேதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் நடிகர் விஜய் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அபராதம் விதித்த வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. இந்த வழக்கின் இறுதிகட்ட விசாரணை நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு நடந்தது. அனைத்துதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

இந்தநிலையில், இந்த வழக்கில் தீர்ப்பளித்த சென்னை ஐகோர்ட்டு விஜய் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. விஜய்க்கு வருமான வரித்துறை பிறப்பித்த ரூ.1.50 கோடி அபராதம் செல்லும் எனவும் ஐகோர்ட் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

# பிப்.13-ல் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூடுகிறது!

**புது தில்லி,பிப்.7:**

தமிழகம், கர்நாடகம் இடையே காவிரி நதி நீர் பங்கீட்டு பிரச்னை பல ஆண்டுகளாக நிலவி வந்த நிலையில் இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அப்போது கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீர் தமிழகத்திற்க்கு வழங்க வேண்டும் என்பதை அத்தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிர்ணயம் செய்தது. அந்த தீர்ப்பை அமல்படுத்தவும், காவிரி நீர் பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்ச நீதிமன்றம் அமைத்தது.

அதன்படி இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றன.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 47 வது கூட்டம் ஜனவரி 6 ஆம் தேதி நடைபெற்றது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு ஜனவரி மாதம் 2.76 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அந்த கூட்டத்தில் கர்நாடகாவுக்கு ஆணையிட்டது

இந்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம், அதன் தலைவா எஸ்.கே. ஹல்தாா தலைமையில் தில்லியில் உள்ள அந்த ஆணையத்தின் அலுவலகத்தில் பிப். 13 ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளது

காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை உறுதி செய்வதற்காக இக்கூட்டம் நடைபெறுகிது.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தொடாபான விவகாரத்தில் கா்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை மீது காவிரி நீா் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீா் முறைப்படுத்தும் குழு மற்றும் தமிழகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விளக்கத்தின் அடிப்படையில் மத்திய நீா்வள ஆணையம் இறுதி முடிவு எடுக்கும் என கடந்த ஆண்டு 2025 நவம்பா 13 ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

# ஊட்டியில் தொடரும் உறைபனியால் மக்கள் பாதிப்பு



**நீலகிரி,பிப்.7:**

நீலகிரி மாவட்டம் ஊட்டியை அடுத்த மஞ்சூர், குன்னூர் பகுதிகளில் கடந்த டிசம்பர் முதல் வாரம் உறைபனி தொடங்கியது. தற்போது பிப்ரவரி மாதத்திலும் உறைபனியின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக நேற்று ஊட்டி குதிரை பந்தய மைதானம், காந்தல், தலைக்குந்தா, அவலாஞ்சி போன்ற இடங்களில் உறைபனி அதிகமாக காணப்பட்டது. புற்கள், இலைகள் மீது உறைபனி படர்ந்து இருந்தது. அதேபோல சாலையோரங்களில் நிறுத்தப்பட்டு இருந்த வாகனங்கள் மீது காணப்பட்ட உறைபனி வெண் பஞ்சுகளை போல் இருந்தன.

வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் உறைபனி காலநிலை இல்லாமல் இருக்கும். ஆனால், தற்போது உறைபனி காலநிலை தொடர்ந்து நீடிப்பதால் அன்றாட பணிகளை மேற்கொள்வதில் கடும் பாதிப்பு ஏற்படுவதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக் கப்பட்டு உள்ளது. ஊட்டியில் கடுங்குளிரை சமாளிக்க பொதுமக்கள் தீ மூட்டி குளிர் காய்ந்தனர். இந்த உறைபனி காரணமாக நகர பகுதிகளில் குறைந்தபட்சமாக 3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், தலைக்குந்தா, அவலாஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் பூஜ்யம் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் பதிவானது.

# மேகாலயா: சுரங்க வெடிவிபத்தில் பலியானோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல், நிவாரணம் அறிவிப்பு

**புது தில்லி,பிப்.7:**



மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தின் தங்க்ஸ்கை பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சந்தேகத்திற்குரிய வகையிலான இந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் தொழிலாளர்கள் பலர் மிக குறுகிய பகுதியில் சுரங்க பணியில் ஈடுபட்டு இருந்தபோது, வெடிவிபத்து ஏற்பட்டதில் அவர்கள் சிக்கி கொண்டனர்.

நுழைவு பகுதியில் பாறைகள் விழுந்து மூடியதில், உள்ளே இருந்தவர்களால் வெளியே வர முடியவில்லை. இதில் பலர் உயிரிழந்தனர். இதுபற்றி போலீஸ் சூப்பிரெண்டு விகாஸ் குமார் கூறும்போது, 16 உடல்களை இதுவரை மீட்டுள்ளோம். ஒருவர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளார்.

தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

16 பேரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபருக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரண தொகை வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இந்த நிதி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து அளிக்கப்படும்.

# வெள்ளி விலை ரூ. 300-க்கு கீழ் குறைந்தது!



**சென்னை,பிப்.7:**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை காலை குறைந்துள்ளது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ. 20,000 குறைந்துள்ளது.

தங்கத்தின் விலை இதுவரை இல்லாத அளவுக்கு அதிவேகமாக உயர்ந்து வருகிறது. ஒரு சவரன் தங்கம் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், சமீபகாலமாக தங்கம் விலை ஒருநாளில் ஆயிரக்கணக்கில் வித்தியாசம் ஏற்படுகிறது.

இந்த வாரத் தொடக்கத்தில் தங்கத்தின் விலை அதிகரித்த நிலையில், நேற்று அதிரடியாக சவரனுக்கு ரூ. 4,640 குறைந்து ரூ. 1,14,560-க்கு விற்பனையானது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை ஒரு சவரனுக்கு ரூ. 1,600 குறைந்து ரூ. 1,12,960-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிராமுக்கு ரூ. 200 குறைந்து ரூ. 14,120-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல், வெள்ளியின் விலையும் கிராமுக்கு ரூ. 20-ம், கிலோவுக்கு ரூ. 20,000-ம் குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ. 280-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு வெள்ளியில் விலை ரூ. 300-கீழ் குறைந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# த.வெ.க. விருப்ப மனு வினியோகம் தொடங்கியது

**சென்னை,பிப்.7:**



சட்டசபை தேர்தலை சந்திக்க த.வெ.க. தீவிரமாகி உள்ளது. தற்போது தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணியில் த.வெ.க. ஈடுபட்டு வருகிறது. அதே நேரத்தில், தேர்தலை தனித்து சந்திப்பதா? கூட்டணி அமைத்து போட்டியிடுவதா? என்று த.வெ.க. முடிவு செய்யாத நிலையில் இருந்து வருகிறது.

இந்தநிலையில் த.வெ.க. விருப்ப மனு வினியோகம் இன்று தொடங்கியது. த.வெ.க. சார்பில் சட்டசபை தேர்தலில் போட்டியிட விரும்புவோர் ரூ.100 மட்டும் செலுத்தி விருப்ப மனு பெற்றுக்கொள்ளலாம்.

விருப்ப மனு திருப்பி அளிக்கும்போது பொதுத்தொகுதிக்கு ரூ.10,000 செலுத்த வேண்டும். 14-ந்தேதி வரை விருப்ப மனுக்களை பெற்று, பூர்த்தி செய்து வழங்கலாம்.

இதற்கான பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 234 தொகுதிகளுக்கும் விருப்ப மனுக்கள் வாங்கப்பட உள்ளது.

மனுக்களை பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை வாங்குவதற்காக மாநில நிர்வாகிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

# பஞ்சாபில் ஆம் ஆத்மி நிர்வாகி சுட்டுக் கொலை!

**குருத்வாரா,பிப்.7:**

ஜலந்தரில் உள்ள குருத்வாராவில் இருந்து வெள்ளிக்கிழமை காலை 7.50 மணியளவில் வெளியே வந்த லக்கி ஓபராய் அவரது காரில் ஏறியுள்ளார்.

அப்போது இரண்டு ஸ்கூட்டர்களில் வந்த மர்ம நபர்கள் காருக்குள் இருந்த லக்கி ஓபராயை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளனர். சுமார் 8 முதல் 10 முறை அவரை நோக்கிச் சுடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர், உயிரிழந்துவிட்டதாக ஜலந்தர் காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஜலந்தர் தொகுதியின் பொறுப்பாளர் ராஜ்விந்தர் தியாராவுக்கு மிகவும் நெருக்கமானவராக கருதப்படுகிறார்.

# புதிய நியாய விலை கடை திறப்பு விழா





**திருவண்ணாமலை, பிப்.07:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போளூர் ஒன்றியம் முக்குறும்பை ஊராட்சியில் புதிய நியாய விலை கடையை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் M. S. தரணி வேந்தன் அவர்கள் புதிய நியாய விலை கடையை திறந்து வைத்து விழாவினை சிறப்பித்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள், போளூர் சட்டமன்ற பொறுப்பாளர் உயர்திரு டாக்டர்.எ. வ. வே.கம்பன் MD அவர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதுச்சேரியில் குடும்ப தலைவிக்கு ரூ.2500 வழங்கும் திட்டம் தொடக்கம்




**புதுச்சேரி, பிப்.07:** புதுச்சேரியில் தனியார் நடத்திய நிகழ்ச்சியில் முன்னாள் ஆளுநர் கிரண்பேடி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

புதுச்சேரி மாநிலம் கல்வி, சுகாதார துறைகளில் முன்னோடியாக உள்ளது. சிறிய மாநிலம், மக்கள்தொகை குறைவாக இருந்தாலும் இங்கு ஏராளமான கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளன.

இருந்தாலும் திறன் மேம்பாட்டு துறையில் பின்தங்கி இருக்கிறது. அரபிந்தோ ஆசிரமத்தில் உற்பத்தியாகும் அகர்பத்தியை தவிர வேறு எந்த உற்பத்தியும் இல்லை.

புதுச்சேரியில் நிறைய ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்க வேண்டும்.

வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்து பவர்களாக புதுச்சேரி இளைஞர்கள் மாற வேண்டும். மத்திய அரசின் வருவாயை பெரிதும் சார்ந்து நிற்கிறோம்.

இதில் பெரும்பாலும் அரசின் ஊழியர் சம்பளம் பென்ஷனுக்கு செலவிடப்படுகிறது. எனவே புதுச்சேரியின் வருவாய் உயர்த்தப்பட வேண்டும். இலவசங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது, மது வகைகள் மீதான வரி குறைப்பு ஆகியன தேவையற்றவை.

மது மீதான வரியை அதிகரித்தால், அரசின் வருவாய் கூடுவதோடு, மது அருந்தி உடல் நலம் பாதிக்கப்படுவது குறையும். இதனால் அரசின் மருத்துவ செலவுகள் ஒரு பக்கம் குறையும்.

ஆளுநரும், முதலமைச்சரும் மோதலின்றி பணியாற்ற வேண்டும் என்றால் இருவருக்கும் மக்கள் நலம் என்ற ஒற்றை குறிக்கோள் இருக்க வேண்டும்.

அப்போது தான் மோதல் ஏற்படாது. ஆளுநர், முதலமைச்சர் மோதலால் மக்கள் பணம் தான் வீணடிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

## திருப்பூரில் தக்காளிப்பழங்களை ஓடையில் கொட்டும் விவசாயிகள்



**திருப்பூர், பிப்.07:** சைவம், அசைவம் என எந்த வகை உணவுகள் தயாரித்தாலும் முதன்மை இடத்தை தக்காளிகள் பெறுகின்றன. இதனால் தக்காளியின் தேவை எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும்.

இதைக்கருத்தில் கொண்டு தக்காளி பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சில நேரங்களில் விளைச்சல் அதிகரிப்பு காரணமாக தக்காளி விலை வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு ஒரு கிலோ தக்காளி ரூ.100 வரை விற்பனையானது. மேலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டு சாலையோரங்களில் வீசும் அவலமும் ஏற்பட்டு வந்தது.

தற்போது திருப்பூரில் தக்காளி விலை வீழ்ச்சி அடைந்து வீதிகளில் வீசப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது.

திருப்பூரை பொறுத்தவரை தென்னம்பாளையம்மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைக்கு திருப்பூர் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து தக்காளி விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதம் கிலோ ரூ.50 வரை தக்காளி விற்பனையானது. ஆனால் கடந்த சில நாட்களாக தக்காளி விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. தரத்துக்கு ஏற்ப 5 கிலோ முதல் 10 கிலோ வரை ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்டது. வரத்து அதிகரிப்பு காரணமாக தக்காளி விற்பனையாகாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தக்காளி அழுகி விடுகின்றன.

விலை வீழ்ச்சியை சந்தித்ததால் அந்த தக்காளிகளை கூடை, கூடையாக மார்க்கெட் அருகே உள்ள ஜம்மனை ஓடையில் வியாபாரிகள் கொட்டி வருகின்றனர். இன்னும் விலை வீழ்ச்சி அடைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நாராயண பெருமாள் மஹா சம்ப்ரோக்ஷணம் திவ்ய சேவை.







திருகோஷ்டியூர் ஸ்ரீதிருமாமகள் தாயார் சமேத ஸ்ரீ ஸௌம்ய நாராயண பெருமாள் மஹா சம்ப்ரோக்ஷணம் திவ்ய சேவை.

## 108 திவ்ய தேசங்களில் ஒன்றான சவுமிய நாராயண பெருமாள் கோவில் தங்க கோபுரத்திற்கு மகா கும்பாபிஷேகம்







**சிவகங்கை, பிப்.07:** சிவகங்கை மாவட்டம் சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானத்திற்குட்பட்ட சவுமிய நாராயன பெருமாள் கோவில் அமைந்துள்ளது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றான இந்த கோவிலில் சவுமிய நாராயண பெருமாள் திருமாமகள் தாயாருடன் அருள் பாலிக்கிறார்.

3 தளங்களை கொண்டு அமைந்துள்ள இக்கோவிலில் நர்த்தன கிருஷ் கிருஷ்ணன் தரைத்தளத்திலும், அனந்த சயனகோலத்தில் பெருமாள் முதல் தளத்திலும், நின்ற கோலத்தில் உபேந்திர பெருமாள் இரண்டாம் தளத்திலும், அமர்ந்த நிலையில் பரமபத நாதர் மூன்றாம் தளத்திலும் காட்சியளிக்கின்றனர்.

இந்த மூலவர்கள் அமைந்துள்ள அஷ்டாங்க விமானத்தில் பக்தர்களின் கோரிக்கையை தொடர்ந்து தங்க கவசம் பொருத்தும் பணியானது சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம், சௌமிய நாராயன பெருமாள் அறக்கட்டளை மற்றும் அறநிலையத்துறை சார்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டது.

இந்த பணிகள் முடிவுற்ற. நிலையில் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டு கடந்த 1-ந் தேதி முதல் கோவிலில் முதல்கட்ட யாகசாலை பூஜைகள் தொடங்கியது. நேற்று 6 மற்றும் 7-வது கால யாகசாலை பூஜை நடைபெற்றது. வெள்ளிகிழமை அதிகாலை முதல் சிறப்பு ஹோமமும், ஓதுவார்கள் மந்திரங்கள் முழங்க கடம்புறப்பாடு நடைபெற்றது.

தொடர்ந்து 9.26 முதல் 10.18 மணிக்குள் தங்க கவச கோபுரங்களில் உள்ள கலசங்களின் மீது புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை அடுத்து கலசங்களுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டு பக்தர்கள் நீர் மீது புனித தெளிக்கப்பட்டது. இதனை லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் மூலவருக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் அலங்காரங்கள் செய்யப்பட்ட பக்தர்களுக்கு காட்சியளித்தார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிவகங்கை சமஸ்தான தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் ராணி மதுராந்தகி நாச்சி யார், தலைமையில் தேவஸ் தானம் மேலாளர் இளங்கோ, கண்காணிப்பாளர் சரவண கணேசன், கௌரவ தலைவர் இலங்கை ஊவா மகாணாம் முன்னாள் முதல்வர் ஆளுனருமான செந்தில் தொண்டமான், டிரஸ்ட் தலைவர் திருப்பணிக்குழுத்தலைவர் ராஜ்மோகன், செயலர் ஸ்ரீராம்பட்டாச்சாரியார். மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர்.

இவ்விழாவில் பட்டமங்களம் நாட்டார் மயில்ராயன் கோட்டை நாட்டார்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# கடல் காப்பான் ஓவியப்போட்டி



**இராமநாதபுரம், பிப்.07:** பாம்பன் கடல் ஓசை சமுதாய வானொலி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட பள்ளிக் கல்வித் துறை இணைந்து நடத்தும் கடல் காப்பான் ஓவியப் போட்டி, பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியை செல்லம்மாள் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியை நிஷா வரவேற்றுப் பேசினார்.

கடல் ஆமை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கருத்துகளை.ஆசிரியர் ஜெ.ஜே. லியோன் விளக்கி பேசினார். மதிப்பீட்டு கல்வி குறித்து கடல் ஓசை அலெக்ஸ் பாண்டியன் பேசினார்.கடல் ஆமையின் உணவு, கடல் வளத்தை பாதுகாப்பதில் கடல் ஆமையின் பங்கு, வலையில் சிக்கிய கடல் ஆமைகளை பாதுகாத்து எவ்வாறு கடலில் விடுவது மற்றும் கடலோசை வானொலியின் பணிகள் குறித்தும், கடலோடு விளையாடு வானொலி நிகழ்ச்சி குறித்தும் கடல் ஓசை ஒருங்கிணைப்பாளர் லெனின் விளக்க உரை நிகழ்த்தினார்.

முன்னதாக, நடைபெற்ற ஓவியப் போட்டியில் பங்கு பெற்ற 27 மாணவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. முதல் பரிசினை ஏழாம் வகுப்பு ரிஸ்விதா, இரண்டாம் பரிசினை ஆறாம் வகுப்பு தேவிகா, மூன்றாம் பரிசினை எட்டாம் வகுப்பு ஹனிசா பெற்றனர்.

நிறைவாக, ஆசிரியை ஞானசௌந்தரி நன்றி கூறினார் நிகழ்விற்கான ஏற்பாடுகளை கடல் ஓசை வானொலி நிறுவன ஊழியர்களுடன் இணைந்து, பள்ளி ஆசிரியர்கள் சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, நான்சி, பிரிஸ்கிலா போன்றோர் செய்திருந்தனர்.

## புதுச்சேரி எல்லையில்
# 41 இடங்களில் புதிதாக சோதனைச்சாவடி

**புதுச்சேரி, பிப்.07:** தமிழகம்-புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு விரைவில் சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது. இதனால் புதுச்சேரி அரசு துறைகள் முழு வேகத்தில் சுழல தொடங்கியுள்ளன.

அரசியல் கட்சிகள் வாக்காளர்களை அணுகும் உத்திகளை வகுத்துக் கொண்டிருக்கின்றனர். அதே நேரத்தில் புதுச்சேரி கலால் துறைக்கு தேர்தல் நேரத்தில் உருவாகும் முக்கிய சவால்களில் ஒன்றான மதுக்கடத்தலை தடுக்கும் முனைப்பில் களமிறங்கியுள்ளது.

மது கடத்தலை தடுக்க புதுச்சேரியில்-15, காரைக்கால்-10, ஏனாம்-10, மாகி-6 என மாநிலம் முழுவதும் 41 சோதனை சாவடிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

புதுச்சேரி பிராந்தியத்தை பொறுத்தவரை மதகடிப்பட்டு, திருக்கனூர், கோரிமேடு, அய்யங்குட்டிப் பாளையம், கனகசெட்டிக்குளம், தவளக்குப்பம், மடுகரை, சோரியாங்குப்பம் முள்ளோடை, சேதராப்பட்டு, உச்சிமேடு, குருவிநத்தம், மணமேடு, கரையாம்புத்தூர், காமராஜர் மணிமண்டபம் உள்ளிட்ட 10 இடங்களில் இந்த தற்காலிக சோதனை சாவடிகள் அமைக்கப்படுகின்றன.

இந்த கலால் சோதனை சாவடிகள் புதுச்சேரி மாநிலத்திற்குள் உள்ளே, வெளியே வரும் வாகனங்களை தடுத்து நிறுத்தி, பணம், மதுபாட்டில்கள், பரிசு பொருட்கள் வாக்காளர்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனவா என கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த கலால் சோதனை சாவடிகளுக்கு மின்வசதி, இருக்கை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுவதற்கான டெண்டர் பணிகளையும் கலாத்துறை முடுக்கிவிட்டுள்ளது.

# ஆண்டு விழா




**நாகை, பிப்.07:** நடராஜன் தமயந்தி மேல் நிலைப் பள்ளியில் 61 ஆவது ஆண்டு விழா 05:02:2026 மாலை நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளியின் செயலர் மற்றும் நடராஜன் தமயந்தி கல்விக் குழுமத்தின் துணைத்தலைவர் திரு J. கணேஷ் B.E., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக நாகை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.V.பவணந்தி M.Sc., அவர்கள் பங்கேற்று சிறப்பிடம் பெற்ற மாணவர்கள் மற்றும் ஓய்வு பெறும் ஆசிரியர் திரு.M.குமார் ஆகியோர்க்கு நினைவுப்பரிசுகள் வழங்கி கல்வியே நம்மை வளப்படுத்தும் கருவி எனக்கூறி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் கல்வி அறக்கட்டளை உறுப்பினர்கள் திருமதி.சுபாஷினி ராஜ்குமார், திரு. R.ஜெய்சிவா, திரு.G.சஞ்சய் ஆகியோர் பங்கேற்று தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பணி நிறைவு பெறும் ஆசிரியர் திரு M. குமார் அவர்கள் ஏற்புரை வழங்கினார். நிறைவாக ஆசிரியர் திரு B. சண்முகம் அவர்கள் நன்றியுரை கூறினார்.

கலை நிகழ்ச்சிகளுடன் ஆண்டு விழா இனிதே நிறைவடைந்தது.

## ஆளுநர் – முதலமைச்சர் மோதலால் மக்கள் பணம் வீணடிப்பு: புதுச்சேரி முன்னாள் ஆளுநர் குற்றச்சாட்டு,



**புதுச்சேரி, பிப்.07:** புதுச்சேரியில் தனியார் நடத்திய நிகழ்ச்சியில் முன்னாள் ஆளுநர் கிரண்பேடி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

புதுச்சேரி மாநிலம் கல்வி, சுகாதார துறைகளில் முன்னோடியாக உள்ளது. சிறிய மாநிலம், மக்கள்தொகை குறைவாக இருந்தாலும் இங்கு ஏராளமான கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளன.

இருந்தாலும் திறன் மேம்பாட்டு துறையில் பின்தங்கி இருக்கிறது. அரபிந்தோ ஆசிரமத்தில் உற்பத்தியாகும் அகர்பத்தியை தவிர வேறு எந்த உற்பத்தியும் இல்லை.

புதுச்சேரியில் நிறைய ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்க வேண்டும். வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்து பவர்களாக புதுச்சேரி இளைஞர்கள் மாற வேண்டும். மத்திய அரசின் வருவாயை பெரிதும் சார்ந்து நிற்கிறோம்.

இதில் பெரும்பாலும் அரசின் ஊழியர் சம்பளம் பென்ஷனுக்கு செலவிடப்படுகிறது. எனவே புதுச்சேரியின் வருவாய் உயர்த்தப்பட வேண்டும். இலவசங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது, மது வகைகள் மீதான வரி குறைப்பு ஆகியன தேவையற்றவை.மது மீதான வரியை அதிகரித்தால், அரசின் வருவாய் கூடுவதோடு, மது அருந்தி உடல் நலம் பாதிக்கப்படுவது குறையும். இதனால் அரசின் மருத்துவ செலவுகள் ஒரு பக்கம் குறையும்.

ஆளுநரும், முதலமைச்சரும் மோதலின்றி பணியாற்ற வேண்டும் என்றால் இருவருக்கும் மக்கள் நலம் என்ற ஒற்றை குறிக்கோள் இருக்க வேண்டும். அப்போது தான் மோதல் ஏற்படாது. ஆளுநர், முதலமைச்சர் மோதலால் மக்கள் பணம் தான் வீணடிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

## S.R. ORGANICS கடை திறப்பு விழா




திருச்சி அம்மன் நகர் எண்.38 கே.கே நகர் திருச்சி -620 021 ல் S.R. ORGANICS கடை திறப்பு விழா நேற்று (06.02.26) நடைபெற்றது. தொடர்புக்கு:96290 19001

# கவிதை அரங்கம்!



back is all your mind.



முதல் முயற்சி தோல்வி
என்றால் என்ன மீண்டும்
மீண்டும் முயற்சி
செய்யுங்கள் தோல்வியை
வென்றுவிடலாம்
வெற்றியால்

உங்களால் கனவு காண
முடிகிறதென்றால்
அதை அடையவும் முடியும்

ஒவ்வொரு சிறிய
மாற்றமும்
பெரிய வெற்றியின்
ஒரு பகுதியாகும்

கடந்து வந்த ஆயிரம்
ஏமாற்றங்கள் நீங்கள்
செய்யும் ஒரு புதிய
முயற்சிக்கு ஈடாகாது
முன்னேறுங்கள்
வெற்றி பெறுங்கள்

# வாழ்க்கை தத்துவம்...



முன் செல்லும் காற்றை
எதிர்த்து நடந்தால் தான்
நிலையான அடித்தளம் கிடைக்கும்

சில நேரங்களில்
பயணமே முக்கியம்
இலக்கை தவிர்த்தாலும்
வாழ்க்கையில் வண்ணம் காணலாம்

எதிர்பார்ப்புகளை குறைத்தால்
வாழ்க்கை சுமையாகாது
(சுலபமாகும்)

சில நேரங்களில்
எதுவும் நடக்காததுதான்
வாழ்க்கையின் மிகப் பெரிய பாடம்

வழி தெரியாத பாதையில்
பயணிக்கிற மனதை
வாழ்க்கை அடிக்கடி பரிசளிக்கிறது

# பரிமாற்றம்



அருகில் இருந்த ஐஸ்கிரிம் பார்க் சென்றான் ராஜேஷ். இவனைத் தவிர எல்லோரும் காதல் ஜோடியாக அமர்ந்திருந்தனர். இவனுக்கு ரைட் சைட் அமர்ந்திருந்த ஜோடி தன் கை தன்னோட வாய்க்கு ஐஸ் போகாமல் எதிரே அமர்ந்திருந்த வாய்க்கு ஊத்தியது. இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். போன் அடிக்க எடுத்து பேசினான். ராஜேஷ் தம்பி ரகு. அண்ணா உனக்கு பெண்ணுப் பார்த்திருக்கு. பெண்ணோட பேரு நர்மதா. புரோக்கர் பெண்ணோட போட்டோவை கொடுத்து போய் இருக்கார் என்றான். அப்படியா என்றான் ராஜேஷ். ஆமாண்ணே என்றான். அப்படினா பெண்ணோட போட்டோவை என்னோட செல்லுக்கு அனுப்பி வை. சரிண்ணே என போட்டோவை அனுப்பினான், செல்லுக்கு வந்த போட்டோவை பார்த்து ஷாக் ஆனான் ராஜேஷ். இது என்னடா கொடுமை இம்மீடியட்டிலியாக தம்பி செல்லுக்கு ஹால் பண்ணினான். டேய் தம்பி இந்த பெண்ணு வேணாம்டா? எண்ணன்னே வேணாம்னு சொல்ற. ஐஸ்கிரிம் பார்க்கில் வேறோருவனுடன் ஐஸ்கிரிம் பரிமாற்றம் நடத்தி கொண்டிருக்காடா? என்றான் எண்ணன்ன சொல்ற. ஆமா தம்பி எனக்கு சைடுலத்தான் இந்த கொடுமை நடக்கு. அதனால் இந்த பெண்ணு வேணாம்டா. வேற பொண்ணைப் பார்க்க சொல்லு என்றான். சரிண்ணே வீட்டுல சொல்லி வேற பெண்ணப் பார்க்க சொல்றேன் என்றான் ரகு. நல்லவேளை தப்பிச்சோம் என நினைத்துக் கொண்டான் ராஜேஷ்.

**எஸ்.மாடசாமி**

# வறுமையை வெல்ல வழி!



கடலூர் மாவட்டம், கிள்ளை, அரசு உயர்நிலைப் பள்ளியில், 1984ல், 10ம் வகுப்பு படித்த போது, தலைமை ஆசிரியராக இருந்தார் ராமசாமி முதலியார். ஆங்கில பாடத்தை எளிமையாக புரியும் வகையில் நடத்துவார். வாழ்க்கை அனுபவ கதைகளையும் கூறுவார்.

ஏழை குடும்பத்தில் பிறந்தவர். கல்லுாரியில் படித்த காலத்தில், சினிமா, 'டூரிங்' தியேட்டரில், ஆப்ரேட்டராக பகுதி நேரம் பணிபுரிந்து, பொருள் ஈட்டியவர். அப்படி பெற்ற வருமானத்தை படிப்பு செலவுக்கு பயன்படுத்தியதாக கூறினார். அது, பெரும் துாண்டுதலாக அமைந்தது.

வறுமை குடும்பத்தில் பிறந்திருந்த நான் அவரது வாழ்க்கை முறையை பின்பற்றினேன். பள்ளியில் வகுப்புகள் முடிந்ததும், இரவு நேரத்தில், மீன் பிடிக்க செல்வதை வழக்கமாக்கினேன். அந்த வருமானத்தை பாலிடெக்னிக்கில் தொழில் நுட்பப் படிப்புக்கு பயன்படுத்தினேன்.

படிப்பை முடித்து, ஆசிய நாடான சிங்கப்பூரில் பணிபுரிந்தேன். தற்போது, சொந்த கிராமத்தில், சுயதொழில் செய்து வாழ்கிறேன். கல்லுாரியில் உயர்கல்வி படிக்கும், என் பிள்ளைகளும், கல்விக் கட்டணம் உள்ளிட்ட தேவைகளை பகுதி நேர உழைப்பில் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

எனக்கு, 54 வயதாகிறது; பள்ளியில் அந்த தலைமை ஆசிரியர் கற்பித்த அனுபவப்பாடம். என் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கியுள்ளது. அவரை வணங்குகிறேன்!

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*போடா, நீ முட்டாள் !*

*குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !*

*டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !*

*மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?*



# தினம் ஒரு சமையல்



## ஐவ்வரிசி வேர்க்கடலை கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:**

அரைப்பதற்கு...

| | |
|---|---|
| * சோம்பு | - 1 டீஸ்பூன் |
| * கசகசா | - 1 டீஸ்பூன் |
| * மிளகு | - 1 டீஸ்பூன் |
| * சீரகம் | - 1 டீஸ்பூன் |
| * வெங்காயம் | - 2 |
| * தக்காளி | - 2 |
| * தேங்காய் | - 1/4 கப் |
| * பொட்டுக்கடலை | - 2 டேபிள் ஸ்பூன் |
| * தண்ணீர் | - சிறிது |

குருமாவிற்கு...

| | |
|---|---|
| * தேங்காய் எண்ணெய் | - 1 1/2 டேபிள் ஸ்பூன் |
| * சோம்பு | - 1 டீஸ்பூன் |
| * கிராம்பு | - 3 |
| * ஏலக்காய் | - 3 |
| * பட்டை | - 1 சிறிய துண்டு |
| * இஞ்சி பூண்டு பேஸ்ட் | - 2 டீஸ்பூன் |
| * வெங்காயம் | - 2 |
| * மல்லித் தூள் | - 1 டீஸ்பூன் |
| * மிளகாய் தூள் | - 1 டீஸ்பூன் |
| * தண்ணீர் | - 2 1/2 கப் |
| * உப்பு | - சுவைக்கேற்ப |
| * கொத்தமல்லி | - சிறிது |

**செய்முறை:**

* முதலில் மிக்சர் ஜாரில் சோம்பு, கசகசா, மிளகு, சீரகம், வெங்காயம், தக்காளி, 1/4 கப் தேங்காய் மற்றும் பொட்டுக்கடலை சேர்த்து, சிறிது நீரை ஊற்றி நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

* பின்னர் குக்கரை அடுப்பில் வைத்து, அதில் தேங்காய் எண்ணெய் ஊற்றி சூடானதும், சோம்பு, கிராம்பு, ஏலக்காய், பட்டை ஆகியவற்றை சேர்த்து தாளிக்க வேண்டும்.

* அதன் பின் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து வதக்க வேண்டும்.

* அடுத்து அதில் சதுரத் துண்டுகளாக வெட்டிய வெங்காயத்தை சேர்த்து, கண்ணாடி பதத்திற்கு வதக்க வேண்டும்.

* பின்பு அதில் மல்லித் தூள், மிளகாய் தூள் சேர்த்து 1 நிமிடம் வதக்க வேண்டும்.

* பிறகு அதில் அரைத்த மசாலாவை சேர்த்து, தேவையான அளவு நீரை ஊற்றி, சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கிளறி, குக்கரை மூடி, 5 விசில் விட்டு இறக்க வேண்டும்.

* விசில் போனதும் குக்கரைத் திறந்து, அதில் கொத்தமல்லியைத் தூவி கிளறினால், சுவையான வெங்காய குருமா தயார்.

- சட்னியை தாளிக்க ஒரு கடாயில் எண்ணெயை ஊற்றி சூடாக்கி கடுகை போட்டு தாளிக்கவும்.

- கடுகு வெடித்ததும் கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு சேர்த்து, அவை பொன்னிறமாகும் வரை வறுக்கவும்.

- இந்த நிலையில் தக்காளி விழுது மற்றும் அரைத்த எள் பொடியைச் சேர்த்து, எண்ணெய் பிரிந்து வரும் வரை வதக்கி, பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி விடவும்.

- அவ்வளவுதான் சூப்பரான ஹைதராபாத் ஸ்டைல் புதினா சட்னி ரெடி. இதை சூடான இட்லி, தோசையுடன் பரிமாறவும்.

# பேய்மிரட்டி பயன்கள்




பேய்மிரட்டி இலைகளை நீரில் இட்டு காய்ச்சி, அந்த நீரில் ஆவி பிடித்துவந்தால் ஜுரம் விலகும். சளி காய்ச்சல் குணமாகும்.

உடலின் வியாதிகள் போக்குவதில், பல்வேறு அரிய பலன்களைத் தரும் பேய்மிரட்டி, மனிதனின் மன வியாதிகள், வெளிப்புற பாதிப்புகள் இவை நீங்கவும், பெரும் பலன்கள் தருகிறது.

நீண்ட வடிவத்தில் உள்ள பேய்மிரட்டியின் இலைகளை பறித்து, அந்த இலைகளை நன்கு அலசி, அதை சிறிய விளக்கில் வைத்து, இந்த இலையைத் திரியைப் போல சுருட்டி விளக்கின் எண்ணையில் திரி போல வைத்து, விளக்கேற்றி வர, பச்சைத்திரி மூலம், விளக்கு எரியும் அற்புதம் நிகழும். மேலும், இந்த பேய்மிரட்டி அதிசய விளக்கை, வீட்டில் அதிகம் கொசுத்தொல்லை உள்ள நேரங்களில் ஏற்றி வைக்க, கொசுக்கள் விலகிவிடும். கொசுக்கடி இல்லாமல் நிம்மதியாக உறங்கலாம். பேய்மிரட்டி இலைகளைத் திரியாகக் கொண்ட இந்த விளக்கு, நெடுநேரம் எரியும், எண்ணை எளிதில் தீராது என்பது, இதன் தனிச் சிறப்பு

# விஜய்க்கு அடுத்த ஷாக்.. புலி பட வருமானம் மறைப்பு பற்றிய வழக்கில் வந்த தீர்ப்பு



நடிகர் விஜய்யின் ஜனநாயகன் படம் ரிலீஸ் ஆக முடியாமல் சென்சார் தொடர்பான பிரச்சனையில் சிக்கி இருக்கிறது. தேர்தலுக்கு முன் அந்த படம் திரைக்கு வருமா இல்லையா என்பதே அவரது ரசிகர்கள் எல்லோரது மனதிலும் இருக்கும் கேள்வி.

தயாரிப்பாளரை நினைத்தால் தான் வருத்தமாக இருக்கிறது என விஜய் இந்த சர்ச்சை பற்றி பேட்டியில் பேசி இருந்தார்.

விஜய் வீட்டில் 2015ல் நடத்திய வருமான வரித்துறை ரெய்டில், அவர் புலி படத்திற்காக வாங்கிய 15 கோடி ருபாய் சம்பளத்தை மறைத்ததாக கண்டறியப்பட்டு, 1.5 கோடி ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது.

தனக்கு அபராதம் விதித்ததை எதிர்த்து விஜய் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதை விசாரித்த நீதிமன்றம், அவர்தம் விதித்தது சரிதான் என சொல்லி விஜய்யின் மனுவை தள்ளுபடி செய்தது.






# ரஜினி-கமலுக்கு பெரிய வெற்றி கொடுத்த இயக்குனருடன் இணையும் தனுஷ்... யார் தெரியுமா?

வரலாற்று படங்களில் வரும் கதாபாத்திரம் போல உடை அணிந்து போட்டோஷூட் நடத்தியுள்ளார். நடிகை காயத்ரி ஸ்ரீ வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் இதோ:



தமிழ் சினிமாவின் டாப் நாயகன் தனுஷ் அடுத்தடுத்து நிறைய படங்கள் கமிட்டாகி நடித்து வருகிறார்.

இப்போது அவர் போர்த்தொழில் இயக்குனர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் கர படத்தில் நடித்து முடித்திருக்கிறார்.

இப்படத்திற்கு பிறகு தனுஷ், அமரன் இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் புதிய படம் நடிக்கிறார், படத்திற்கு D55 என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

படத்தில் தனுஷுடன் மம்முட்டி, சாய் பல்லவி, ஸ்ரீலீலா உள்ளிட்டோர் நடிக்கிறார்கள், சாய் அபயங்கர் இசையமைக்கிறார். இப்படத்திற்கான பூஜை அண்மையில் எல்லா நடிகர்கள் சூழ நடந்தது.

அடுத்தடுத்து படங்கள் கமிட்டாகி பிஸியாக நடித்துவரும் தனுஷ் புதியதாக கூட்டணி அமைக்க இருக்கும் நடிகர் குறித்த தகவல் வந்துள்ளது.

அதாவது நடிப்பின் அரக்கனாக ரசிகர்களால் கொண்டாடப்படும் தனுஷ் முதன்முறையாக மணிரத்னம் அவர்களுடன் கூட்டணி அமைக்க இருப்பதாக தகவல்கள் வந்துள்ளன.

# மாத்திரைகள் ஏன் பல நிறங்களில் இருக்கிறது?



மாத்திரைகள் ஏன் பல நிறங்களில் இருக்கிறது என்று நீங்கள் எப்போதாவது நினைத்தது உண்டா? உடல்நலப் பிரச்சனைகளைச் சரிசெய்யவும், நோய்களைத் தடுக்கவும், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் பயன்படுத்தும் மாத்திரைகள் ஏன் பல வண்ணங்களிலும், பல வடிவங்களில் செய்யப்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்ப, இந்த பதிவு உங்களுக்காகத் தான். மாத்திரைகள் வெவ்வேறு நிறங்களில் இருப்பதற்குப் பல முக்கிய காரணங்கள் உள்ளன. அவற்றின் முழுவிவரம் பின்வருமாறு..

**வேறுபடுத்தி அறிவதற்காக :** ஒரு நோயாளி ஒரே நேரத்தில் பல வகையான, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டியிருக்கும். ஒவ்வொரு மாத்திரைக்கும் ஒரு தனித்துவமான நிறம் இருந்தால், அவற்றை எளிதாக அடையாளம் கண்டு, குழப்பமின்றி சரியான மாத்திரையை எடுக்க முடியும். இதனால் மருந்துகளை மாற்றி எடுத்துக்கொள்வதால் ஏற்படும் அபாயங்கள் குறைகின்றன.

மருந்தின் வீரியம் மற்றும் தன்மை: சில சந்தர்ப்பங்களில், மாத்திரையின் நிறம் அதன் வீரியம் (Dosage) அல்லது வகையைக் குறிக்கலாம். உதாரணமாக, 500mg பாராசிட்டமால் வெள்ளை நிறத்திலும், 650mg மாத்திரை நீல நிறத்திலும் இருக்கலாம். இது மருந்து வழங்குபவர்களுக்கும், நோயாளிகளுக்கும் குழப்பம் இல்லாமல் இருப்பதை உறுதி செய்யும்.பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை: சில நிறமிகள் (Pigments) மாத்திரைகளை சூரிய ஒளி அல்லது புற ஊதாக்கதிர்களில் இருந்து பாதுகாக்க உதவுகின்றன. இந்த நிறமிகள் மருந்தின் வேதியியல் நிலைத்தன்மையை மேம்படுத்தி, அதன் ஆயுளை நீட்டிக்கின்றன. சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக முத்திரை (Branding): மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், தங்கள் தயாரிப்புகளை மற்ற நிறுவனங்களின் மருந்துகளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட, தனித்துவமான நிறங்களைப் பயன்படுத்துகின்றன. இது ஒரு குறிப்பிட்ட மருந்தை அடையாளப்படுத்தவும், அதன் வர்த்தக முத்திரையை வலுப்படுத்தவும் உதவுகிறது. மனோவியல் தாக்கம் (Psychological Impact): சில ஆய்வுகள் மாத்திரைகளின் நிறம் நோயாளிகளின் மனநிலையில் தாக்கம் ஏற்படுத்துவதாகக் கூறுகின்றன. உதாரணமாக, சிவப்பு அல்லது ஆரஞ்சு நிற மாத்திரைகள் ஆற்றலை அதிகரிப்பதாகவும், நீல நிற மாத்திரைகள் மன அமைதியைக் கொடுப்பதாகவும் சிலர் நம்புகின்றனர்.

**மாத்திரைகளின் நிறங்கள் குறித்து ஆய்வு சொல்வது என்ன?**

ஆய்வுகளின்படி, மாத்திரைகளின் நிறம் அதன் விளைவை நேரடியாக மாற்றாது, ஆனால் நோயாளிகளின் எதிர்பார்ப்புகளையும், மருத்துவத்தின் மீதான நம்பிக்கையையும் பாதிக்கக்கூடும். ஒரு ஆய்வு, சிவப்பு மாத்திரைகள் தூக்க மாத்திரையாகக் கொடுக்கப்பட்டபோது, நோயாளிகள் குறைவான தூக்கத்தைப் பெற்றதாகவும், அதே மாத்திரைகள் ஆற்றல் தரும் மாத்திரையாகக் கொடுக்கப்பட்டபோது அதிக சுறுசுறுப்புடன் இருந்ததாகவும் கண்டறிந்தது. இது placebo effect எனப்படும் மனோவியல் தாக்கத்தை உறுதிப்படுத்துகிறது. பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னலில் (BMJ) வெளியான ஒரு கட்டுரை, நீல நிற மாத்திரைகள் மன அமைதியைத் தருவதாகவும், ஆரஞ்சு நிற மாத்திரைகள் வலி நிவாரணிகளாகவும் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டது.

**மாத்திரைகளில் பயன்படுத்தப்படும் நிறமிகள் இயற்கையானதா?**

மாத்திரைகளுக்கு நிறம் கொடுக்க, உணவு மற்றும் மருந்து நிர்வாகத் துறை (FDA) அங்கீகரித்த சில பாதுகாப்பான நிறமிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை Pharmaceutical Grade Colours என்று அழைக்கப்படுகின்றன. இரும்பு ஆக்சைடு (Iron Oxides): சிவப்பு, மஞ்சள் மற்றும் கருப்பு நிறங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. **டைட்டானியம் டை ஆக்சைடு (Titanium Dioxide):** இது வெள்ளை நிறத்தைக் கொடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது மாத்திரைகளை ஒளியிலிருந்து பாதுகாக்கவும் உதவும்.

**மற்ற நிறமிகள்:** பல செயற்கை மற்றும் இயற்கை நிறமிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, மஞ்சள் நிறத்திற்கு Tartrazine, நீல நிறத்திற்கு Indigo Carmine, சிவப்பு நிறத்திற்கு Allura Red போன்ற நிறமிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிறமிகள் மிகக் குறைந்த அளவில் பயன்படுத்தப்படுவதால், அவை பொதுவாக ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பதில்லை.



**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள் வி.கலியாணசுந்தரனார் வரலாறு

திரு. வி. கலியாணசுந்தரனார்
1935 இல் திரு. வி. க. பிறப்பு
திருவாரூர் விருதாச்சல கல்யாணசுந்தரம்
26 ஆகத்து 1883
தண்டலம் காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா இறப்பு 17 செப்டம்பர் 1953 (அகவை 70)
பணி தமிழறிஞர், செயற்பாட்டாளர்

திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் அல்லது திரு. வி. க., (THIRU. V. KALYANASUNDARAM, 26 ஆகத்து 1883 17 செப்டம்பர் 1953[1]) அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த்தென்றல் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

வாழ்க்கைச் சுருக்கம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம்(தற்போது தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார்.

கலியாணசுந்தரனாரின் தந்தை இலக்கியப் பயிற்சியும் இசைப்பயிற்சியும் உடையவர். ஆசிரியத் தொழிலுடன் வணிகமும் புரிந்தவர். ஆசிரியராகத் திருவாரூரில் பணி செய்த போது கலியாணசுந்தரமும் அங்கேயே வளர்ந்தார். இவர் பச்சையம்மாள் என்பவரை மணந்து மூன்று ஆண்களையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றார். இவ்வம்மையார் இறந்த பின்னர் சின்னம்மாள் என்பாரை மணந்து நான்கு ஆண் மக்களையும் நான்கு பெண் மக்களையும் பெற்றார். இவர்களுள் ஒருவரே கல்யாணசுந்தரனார்.

கல்வி

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னையில் இராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அதன் பின்னர், 1894-இல் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார். 1904-ஆம் ஆண்டில் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

தமிழ்க் கல்வி



திரு. வி. க அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் தலை

உவெசுலி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் நட்பு ஏற்பட்டது. அவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். அவரிடம் தமிழ் நூல்களை முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார். கதிரவேற்பிள்ளை நீலகிரிக்குச் சென்ற பொழுது அங்கு காலமானார். அதன் பின்னர் கல்யாணசுந்தரனார் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ், மற்றும் சைவ நூல்களையும் பாடம் கேட்டார்.

**ஆசிரியப் பணி**

1906-ஆம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கர் ஆகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்தும் அவர் நீங்கினார். பின்னர் 1909-இல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது கமலாம்பிகை என்ற நங்கையை 1912-இல் திருமணம் செய்துகொண்டார்.அவருக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். 1918-ஆம் ஆண்டிற்குள் தம் மனைவி, பிள்ளைகளை இழந்து மீண்டும் தனியரானார். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்து விலகினார்.

**பத்திரிகைப் பணி**

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றினார்.

**அரசியல் பணி**

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார்.

எழுதிய நூல்கள்

வாழ்க்கை வரலாறுகள்

- யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம், நா.கதிரைவேற்பிள்ளை சரித்திரம் - 1908
- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - 1921
- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - 1927
- நாயன்மார் வரலாறு - 1937
- முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
- உள்ளொளி - 1942
- திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 1 - 1944
- திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 2 - 1944

உரை நூல்கள்

- பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும் - 1907
- பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் - 1923
- காரைக்கால் அம்மையார் திருமுறை - குறிப்புரை - 1941
- திருக்குறள் - விரிவுரை (பாயிரம்) - 1939
- திருக்குறள் - விரிவுரை (இல்லறவியல்) 1941

**அரசியல் நூல்கள்**

- தேசபக்தாமிர்தம் - 1919
- என் கடன் பணி செய்து கிடப்பதே - 1921
- தமிழ்நாட்டுச் செல்வம் - 1924
- தமிழ்த்தென்றல் (அல்லது) தலைமைப்பொழிவு - 1928
- சீர்திருத்தம் (அல்லது) இளமை விருந்து - 1930. (இதன் ஒரு பகுதியை ஒலிப்பு வடிவில் இங்கு காணொலி)
- தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 1 - 1935
- தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 2 - 1935
- இந்தியாவும் விடுதலையும் - 1940
- தமிழ்க்கலை - 1953

**சமய நூல்கள்**

- சைவசமய சாரம் - 1921
- நாயன்மார் திறம் - 1922
- தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - 1923
- சைவத்தின் சமசரசம் - 1925
- முருகன் அல்லது அழகு - 1925
- கடவுட் காட்சியும் தாயுமானவரும் - 1928
- இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் - 1929
- தமிழ் நூல்களில் பௌத்தம் - 1929
- சைவத் திறவு - 1929
- நினைப்பவர் மனம் - 1930
- இமயமலை (அல்லது) தியானம் - 1931
- சமரச சன்மார்க்க போதமும் திறவும் - 1933
- சமரச தீபம் - 1934
- சித்தமார்க்கம் - 1935
- ஆலமும் அமுதமும் - 1944
- பரம்பொருள் (அல்லது) வாழ்க்கை வழி - 1949

**பாடல்கள்**

- முருகன் அருள் வேட்டல் - 1932
- திருமால் அருள் வேட்டல் - 1938
- பொதுமை வேட்டல் - 1942
- கிறிஸ்துவின் அருள் வேட்டல் - 1945
- புதுமை வேட்டல் - 1945
- சிவனருள் வேட்டல் - 1947
- கிறிஸ்து மொழிக்குறள் - 1948
- இருளில் ஒளி - 1950
- இருமையும் ஒருமையும் - 1950
- அருகன் அருகே (அல்லது) விடுதலை வழி - 1951
- பொருளும் அருளும் (அல்லது) மார்க்ஸியமும் காந்தியமும் - 1951
- சித்தந் திருத்தல் (அல்லது) செத்துப் பிறத்தல் - 1951
- முதுமை உளறல் - 1951
- வளர்ச்சியும் வாழ்வும் (அல்லது) படுக்கைப் பிதற்றல் - 1953
- இன்பவாழ்வு - 1925

**பயண இலக்கிய நூல்கள்**

- இலங்கைச் செலவு (இலங்கைப் பயணம் குறித்த தொகுப்பு நூல்)

**பொதுவுடைமை தொடர்பான கட்டுரைகள்**

- தொழிலாளர் லட்சியங்களைப் பற்றி
- ஓர் இந்திய ஓர்க் ஷாப்பிலிருந்து
- கர்னாடிக் மில் வேலைநிறுத்தம்
- தொழிலாளர் நிலையும் சென்னை சர்க்காரும்
- இந்திய தொழிலாளரின் சர்வதேச நோக்கு
- ஆம்ஸ்டர்டாம் சர்வதேச ஸ்தாபனமும், மாஸ்கோ சர்வதேச ஸ்தாபனமும்
- பெரம்பூர் பட்டாளத்தில் போலீஸ் அட்டூழியம்
- வேலைநிறுத்த உரிமை - கில்பர்ட் ஸ்லேடருக்குப் பதில்
- மில் வட்டாரத்துக் கலகங்கள்

# மேற்கு வங்காள சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட காங்கிரஸ் முடிவு



**புதுடெல்லி, பிப்.7:**

மேற்கு வங்காளத்துக்கு வருகிற ஏப்ரல் மாதம் சட்டமன்ற தேர்தல் நடக்க உள்ளது. இந்த தேர்தல் தொடர்பான காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் மற்றும் மேற்கு வங்காள காங்கிரஸ் கமிட்டி மூத்த தலைவர்கள் கலந்து கொண்ட முக்கிய ஆலோசனை கூட்டம் புதுடெல்லியில் நடந்தது.

இந்த கூட்டத்தில் ராகுல்காந்தி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜுன கார்கே, பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால், மேற்குவங்காள மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் குலாம் அகமது மிர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில், மேற்குவங்காள தேர்தலில் 294 தொகுதிகளில் காங்கிரஸ் தனித்து போட்டியிட முடிவு எடுக்கப்பட்டதாக குலாம் அகமது மிர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி இடதுசாரி முன்னணியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட நிலையில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கட்சிகளின் இலவச அறிவிப்புகளுக்கு சிக்கல்? சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு

**புதுடெல்லி, பிப்.7:**

தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை கவருவதற்காக அரசியல் கட்சிகள் இலவச அறிவிப்புகளை தேர்தல் வாக்குறுதிகளாக வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளன. இலவசங்கள் அறிவிப்புக்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு குரல் எழுப்பி வருகின்றனர். இலவச அறிவிப்புகள் மக்களை ஏமாற்றும் வேலை என அவர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்நிலையில், தேர்தலின் போது வாக்காளர்களை கவருவதற்காக அரசியல் கட்சிகள் அரசின் பொதுப்பணத்தில் இருந்து இலவசங்களை அறிவிப்பதற்கு தடை விதிக்க வேண்டும்எனபொதுநலமனு ஒன்றை வக்கீல் அஸ்வினி உபத்யாயா என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார். அந்தமனுவில், 'இலவசங்களை அறிவிப்பது ஜனநாயக மாண்புகளைச் சிதைப்பதாகவும், அரசியலமைப்புச்சட்டத்திற்கு எதிரானது. இத்தகைய அறிவிப்புகள் தேர்தலின் நேர்மையைப்பாதிப்பதோடு, அரசு கஜானாவிற்குப் பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்துவதாக இருக்கிறது" என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் நேற்று தலைமைநீதிபதிசூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு ஆஜரான மனுதாரர், 'இந்தமனுவைவிரைந்துவிசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' எனமுறையிட்டார்.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு பட்டியலிப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். ஒருவேளை தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு மிக முக்கியமான உத்தரவுகளைபிறப்பித்தால் அது அரசியல் கட்சிகளுக்கு பெரும் நெருக்கடியை தரவும் வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளனர்.

# 807 பேர் காணாமல் போன விவகாரம்; பயப்பட தேவையில்லை – டெல்லி போலீசார்

**புதுடெல்லி, பிப்.7:**



டெல்லியில் ஜனவரி 1-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை பெண்கள், குழந்தைகள் என 807 பேரை காணவில்லை. அப்படியென்றால், நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளனர் என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லியின் முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் கூறி அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

அவர்களில் பலர் இளம் சிறுமிகள். நாட்டின் தலைநகர் டெல்லியில், மக்களின் பாதுகாப்பு கேள்வியாக உள்ளது. இது அச்சமூட்டும் வகையில் உள்ளது. ஆனால், பா.ஜ.க. அரசோ தூங்கி கொண்டிருக்கிறது என்றும் குற்றச்சாட்டாக கூறினார்.

டெல்லியில் சட்டம் ஒழுங்கு ஐ.சி.யு.வில் உள்ளது என கூறிய அவர், டெல்லி மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உங்களுடைய குழந்தைகளை நீங்களே கவனம் கொண்டு பாதுகாத்திடுங்கள் என்றும் கூறினார்.

இந்நிலையில், குழந்தைகள் காணாமல் போன விவகாரத்தில் பொதுமக்கள் அச்சமடையவோ, பயப்படவோ வேண்டிய அவசியமில்லை என டெல்லி போலீசார் தெரிவித்தனர்.

இதுபற்றி டெல்லி போலீசின் மக்கள் தொடர்பு அதிகாரி சஞ்சய் தியாகி கூறும்போது, முந்தின ஆண்டுடன் ஒப்பிடும்போது டெல்லியில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ஒப்பிடும்போது 2026-ம் ஆண்டு ஜனவரியில், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது.

குற்ற செயல்களை அறிவிப்பதில் சிறந்த மற்றும் வெளிப்படை தன்மையுடன் செயல்படும் கொள்கையை டெல்லி போலீசார் பின்பற்றி வருகின்றனர் என்றும் கூறினார். குழந்தைகள் காணாமல் போனது அல்லது கடத்தப்பட்ட சம்பவத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கும்பலுக்கு தொடர்பு இருப்பதுபோல்தெரியவரவில்லை என்றும் போலீசார் தெரிவித்தனர்.

# பள்ளிக்கு சுடிதார் அணிந்து வந்த தலைமை ஆசிரியை.. உள்ளே அனுப்ப மறுத்த காவலாளி

**திருவனந்தபுரம், பிப்.7:**




கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் கொட்டாரக்கரையில் ஒரு நடுநிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் சிந்து என்பவர் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இவர் சுடிதார் அணிந்து பள்ளிக்கு வந்தார். அப்போது அவரை காவலாளி பள்ளிக்குள் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி கேட்டை மூடியதாக கூறப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த தலைமை ஆசிரியை போராட்டத்தில் ஈடுபட்டார். அத்துடன் போலீசுக்கு தகவல் கூறினார்.

உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து காவலாளியிடம் விசாரணை நடத்தினர். அப்போது. சுடிதார் அணிந்து வந்தால் ஆசிரியைக்கு அனுமதி கிடையாது என மேலாளர் உத்தரவு பிறப்பித்தார். அதன்பேரில், சுடிதார் அணிந்த தலைமை ஆசிரியை தடுத்து நிறுத்தி கேட்டை மூடியதாக கூறினார். இதனை தொடர்ந்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்து தலைமை ஆசிரியை பள்ளிக்குள் செல்ல அனுமதித்தனர். இந்த சம்பவம் கேரளாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் குறித்து மேலாளர் கூறுகையில் 'தலைமை ஆசிரியையை பள்ளிக்குள் அனுமதிக்க கூடாது என நான் கூறவில்லை' என்றார்.

ஆசிரியைகள் தங்களது வசதிக்கு ஏற்ப பள்ளிக்கு சுடிதார் அணிந்து வர தடையில்லை என 2021-ம் ஆண்டு உயர் கல்வித்துறை ஆணை பிறப்பித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் தொடர்பாக பள்ளி காவலாளி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்படுகிறது.

# மேகாலயா சுரங்க வெடிவிபத்து வேதனை தருகிறது; ஜனாதிபதி இரங்கல்

**புதுடெல்லி, பிப்.7:**

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தின் தங்க்ஸ்கை பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சந்தேகத்திற்குரிய வகையிலான இந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் தொழிலாளர்கள் பலர் மிக குறுகிய பகுதியில் சுரங்க பணியில் ஈடுபட்டு இருந்தபோது, வெடிவிபத்து ஏற்பட்டதில் அவர்கள் சிக்கி கொண்டனர்.

நுழைவு பகுதியில் பாறைகள் விழுந்து மூடியதில், உள்ளே இருந்தவர்களால் வெளியே வர முடியவில்லை. இதில் பலர் உயிரிழந்தனர். இதுபற்றி போலீஸ்



சூப்பிரெண்டு விகாஸ் குமார் கூறும்போது, 18 உடல்களை இதுவரை மீட்டுள்ளோம். ஒருவர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளார். தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

இந்த சம்பவம் பற்றி குறிப்பிட்டு ஜனாதிபதி திரவுபதி முர்முஇரங்கல்தெரிவித்துஉள்ளார். மேகாலயாவின்கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தில், துரதிர்ஷ்டவசத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி தொழிலாளர்கள் உயிரிழந்தது பற்றிய செய்தியை அறிந்து வேதனை அடைந்தேன். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்த நபர்கள் விரைவில் குணமடைய வேண்டி கொள்கிறேன் என்று தெரிவித்து உள்ளார்.

# புதிய முதல்-மந்திரி பதவியேற்ற மறுநாளே மணிப்பூரில் மீண்டும் கலவரம்

**இம்பால், பிப்.7:**

டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் மணிப்பூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. அதில், சட்டசபை பா.ஜ.க. கட்சி தலைவராக (முதல்-மந்திரி) ஒய்.கெம்சந்த் சிங் தேர்வு செய்யப்பட்டார். 'குகி' பழங்குடி இனத்தை சேர்ந்த முன்னாள் பெண் மந்திரி நெம்சா கிப்ஜென், துணை முதல்-மந்திரியாக தேர்வாகி உள்ளார். இதையடுத்து, மணிப்பூரில் மீண்டும் ஆட்சி அமைக்க ஏதுவாக அங்கு அமலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி வாபஸ் பெறப்பட்டது. மணிப்பூரில் புதிய அரசு வரும் 12-ந்தேதிக்குள், பதவியேற்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், மணிப்பூரில் மீண்டும் கலவரம் ஏற்பட்டுள்ளது. குக்கி இனத்தவர் அதிகம் வசிக்கும் பகுதிக்கு சுயாட்சி கேட்டு நடந்த போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டு கலவரமாக மாறியது. புதிய முதல்-மந்திரி பதவியேற்ற மறுநாளே மணிப்பூரில் கலவரம் ஏற்பட்டுள்ளது. கலவலரக்காரர்கள் பொது சொத்துகளுக்கு தீ வைத்தனர். அமைதியை நிலைநாட்ட காவல்துறை, துணை ராணுவ படைகள் முயன்று வருகின்றன.

# மலையாள நடிகர் கார் மீது மோதிய இருசக்கர வாகனம்! இருவர் படுகாயம்!

**திருவனந்தபுரம், பிப்.7:**

பிரபல மலையாள நடிகர் மணியன்பிள்ளை ராஜுவின் கார் மீது வியாழக்கிழமை இரவு இருசக்கர வாகனம் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

கடந்த 50 ஆண்டுகளாக மலையாள திரைப்படங்களில் நடித்து வருபவர் மணியன்பிள்ளை ராஜு. சுமார் 400 படங்களில் நடித்துள்ள இவர், தயாரிப்பாளராகவும் பல படங்களை தயாரித்துள்ளார். திருவனந்தபுரத்தில் உள்ள வழுதக்காடு கிளப் அருகே வியாழக்கிழமை 9.30 மணியளவில் மணியன்பிள்ளை ராஜு பயணித்த கார் பிரதான சாலையைக் கடக்க முயன்றது. அப்போது இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்த இளைஞர்கள் காரின் முன்புறம் மோதி கீழே விழுந்தனர்.

இதில், சூரஜ் மற்றும் நிதேவ் ஆகிய இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர். இருவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து குறித்து கேரள காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# லாட்டரியில் ரூ. 49 கோடி வென்ற இளைஞர்!

**பெங்களூரு, பிப்.7:**

ஐக்கிய அரபு அமீரகத்தில் செயல்படும் பிரபல லாட்டரி குலுக்கலில் கர்நாடகத்தைச் சேர்ந்த இளைஞர் ரூ. 49 பரிசுத் தொகையை வென்றுள்ளார்.

கர்நாடக மாநிலம், உடுப்பி மாவட்டத்தின் கடப்பாடி மட்டு பகுதியைச் சேர்ந்த சாந்தனு ஷெட்டிகர். இவர் ஓமனில் பணிபுரிந்து வரும் நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் செயல்படும் பிரபல லாட்டரி சீட்டை வாங்கியுள்ளார்.

இந்த நிலையில், குலுக்கலில் அவர் வாங்கிய லாட்டரி சீட்டுக்கு 20 மில்லியன் திராம் (இந்திய மதிப்பின்படி ரூ. 49 கோடி) பரிசுத் தொகை விழுந்துள்ளது.

பரிசு விழுந்த லாட்டரி சீட்டை 500 திராமுக்கு வாங்கியுள்ளார் சாந்தனு. இந்திய மதிப்பின்படி ரூ. 12,300 ஆகும். கடந்த சில நாள்களாக தொடர்ந்து லாட்டரி சீட்டு வாங்கிவரும் சாந்தனுவுக்கு இந்த முறை அதிர்ஷ்டம் அடித்து கோடீஸ்வரர் ஆகியுள்ளார்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த சாந்தனுவுக்கு கடந்த மாதம் பெண் குழந்தை பிறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேகாலயா: சுரங்க வெடிவிபத்தில் பலி 18 ஆக உயர்வு; நிலைமையை ஆய்வு செய்த அமித்ஷா

**புதுடெல்லி, பிப்.7:**



மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தின் தங்க்ஸ்கை பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சந்தேகத்திற்குரிய வகையிலான இந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் தொழிலாளர்கள் பலர் மிக குறுகிய பகுதியில் சுரங்க பணியில் ஈடுபட்டு இருந்தபோது, வெடிவிபத்து ஏற்பட்டதில் அவர்கள் சிக்கி கொண்டனர்.

நுழைவு பகுதியில் பாறைகள் விழுந்து மூடியதில், உள்ளே இருந்தவர்களால் வெளியே வர முடியவில்லை. இதில் பலர் உயிரிழந்தனர். இதுபற்றி போலீஸ் சூப்பிரெண்டு விகாஸ் குமார் கூறும்போது, 16 உடல்களை இதுவரை மீட்டுள்ளோம். ஒருவர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளார்.

தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். பலியானோரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபருக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரண தொகை வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இந்த நிதி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து அளிக்கப்படும். தொழிலாளர்கள் பலர் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர். மாநில பேரிடர் மீட்பு படை, போலீசார் மற்றும் அரசு நிர்வாகத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறினார். இந்த சம்பவத்தில், உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

பலியானோரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்த நபருக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரண தொகை வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இந்த நிதி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து அளிக்கப்படும்.

# வளர்ச்சி அடைந்த டெல்லிக்கான பயணத்தில் அனைத்து மக்களையும் ஈடுபடுத்துவோம்: முதல் அமைச்சர்

**புதுடெல்லி, பிப்.7:**

டெல்லி முதல்-மந்திரி ரேகா குப்தா செய்தி நிறுவனத்திடம் பேசும்போது, நகரத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக தொடர்ந்து என்னுடைய அரசு செயல்படும்.

வளர்ச்சி அடைந்த டெல்லி என்பதற்கான பயணத்தில் அனைத்து மக்களையும் ஈடுபடுத்துவோம். டெல்லியில் செய்யப்பட வேண்டிய ஒவ்வொரு தனி வேலையையும் நாங்கள் செய்வோம். அதில் பொது மக்களையும் ஈடுபடுத்துவோம் என்றார்.

விடுதலை வாங்கி நூறாண்டை நோக்கி ஒட்டுமொத்த நாடும் செல்கிறது. 2047-ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியா, வளர்ச்சி அடைந்த டெல்லி என்ற தொலைநோக்கு பார்வையை பற்றி எப்போதெல்லாம் நான் பேசுகிறேனோ, அதுபற்றி இன்றைய இளைஞர்களும் விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள் என நான் புரிந்து கொள்கிறேன்.

அதற்கான பொறுப்புணர்வையும் அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் என கூறினார். டெல்லியை சிறந்த ஒன்றாக உருவாக்குவதற்கான பணியில் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உள்பட அனைத்து பிரிவு மக்களும் ஈடுபடுவார்கள் என்றார்.

# ரெப்போ வட்டி விகிதம் 5.25 சதவீதமாக நீடிக்கும் – ரிசர்வ் வங்கி

**புதுடெல்லி, பிப்.7:**

2025-ம் ஆண்டு முழுவதும் ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை படிப்படியாக குறைத்து வந்தது. டிசம்பர் 2025இல் 25 அடிப்படை புள்ளிகள் (0.25%) குறைத்து 5.25 சதவீதம் வரையில் கொண்டு வந்தது.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கும் வட்டி விகிதம் ஆகும். இது குறைந்தால் நாம் வாங்கும் வீடு, கார், கல்வி கடன்களின் வட்டி விகிதமும் குறையும்.

ரெப்போ விகிதம் மாற்றமின்றி இருந்தால் வங்கி கடன் வட்டி விகிதங்கள் உயராமல் இருக்கும். வீடு, கார், கல்வி கடன் வட்டி நிலையாக இருக்கும்.

இந்நிலையில், வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை. 5.25 சதவீதமாக நீடிக்கிறது என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா கூறியுள்ளார்.

பணவீக்கம் அதிகரிக்க தொடங்கியதால் வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கியின் 3 நாள் நிர்வாகக் குழு கூட்டத்துக்கு பிறகு கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர் சந்திப்பில் இதை தெரிவித்தார்.

# 2024-ல் சர்வதேச சுற்றுலாவாசிகளின் வருகை 2.05 கோடியாக அதிகரிப்பு

**புதுடெல்லி, பிப்.7:**



இந்தியாவில் கொரோனா பெருந்தொற்று 2019-ம் ஆண்டு இறுதியில் ஏற்படுவதற்கு முன்பு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாவாசிகளின் எண்ணிக்கையை விட 2024-ம் ஆண்டில் அவர்களின் வருகை கூடியுள்ளது.

இதன்படி, இந்திய சுற்றுலா துறையில் 2024-ல் 99.5 லட்சம் என்ற அளவில் வெளிநாட்டு சுற்றுலாவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டது. ஒட்டு மொத்தத்தில் சர்வதேச சுற்றுலாவாசிகளின் வருகை 2.05 கோடியாக உயர்ந்து இருந்தது.

இது 2019-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 14.85 சதவீதம் அதிகம் ஆகும். இந்த வரிசையில் முதல் 5 இடங்களில் மராட்டியம், மேற்கு வங்காளம், குஜராத், உத்தர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

இதேபோன்று 2.05 கோடி பேர் என்ற சர்வதேச சுற்றுலாவாசிகளின் வருகையுடன் உலகளவில் இந்தியா 20-வது இடம் பிடித்து உள்ளது.

2023-24 ஆண்டில் சுற்றுலா துறையில் வேலைவாய்ப்பும் 8.46 கோடி அளவுக்கு அதிகரித்து காணப்பட்டது என மத்திய சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சகம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கின்றது.




# டீ கடையில் மது குடித்தவர்களை கண்டித்த அதிமுக பிரமுகர் வெட்டிக்கொலை




**மதுரை, பிப்.07:** சிலைமான் அருகே இன்று அதிகாலை அதிமுக பிரமுகர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

மதுரை மாவட்டம் சிலைமான் அருகிலுள்ள சாமநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் சக்தி. இவரது மகன் செந்தில்குமார் (36). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். அதிமுக பிரமுகரான இவர், அதே பகுதியில் டீக்கடை நடத்தி வந்தார்.

இன்று காலை 6 மணிக்கு வழக்கம் போன்று கடையை திறக்க சென்றபோது, நான்கு பேர் கொண்ட கும்பல் அவரை வழிமறித்து தகராறு செய்துள்ளது. இதைத்தொடர்ந்து அவரை அரிவளால் சரமாரியாக வெட்டிக் கொன்றுவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த சிலைமான் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உயிரிழந்த செந்தில்குமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், போலீஸாரின் முதல்கட்ட விசாரணையில், அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், இரவு நேரம் செந்தில் குமாரின் டீ கடையில் மது அருந்தியதாகவும் அதனை செந்தில் குமார் கண்டித்ததால் இந்த கொலை சம்பவம் நடைபெற்றதாகவும் தெரியவந்துள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள போலீஸார் கொலையாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# சங்கரன்கோவிலில் முன்னாள் கவுன்சிலர் மகன் கொலை - உறவினர்கள் மறியல்




**தென்காசி, பிப்.07:** சங்கரன்கோவிலில் முன்னாள் கவுன்சிலர் மகனை மர்ம நபர்கள் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவத்தில் தொடர்புடையவர்களை கைது செய்ய வலியுறுத்தி அவரது உறவினர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

சங்கரன்கோவில் ராமசாமியாபுரம் 2-ம் தெருவை சேர்ந்தவர்கள் சந்திரன், ஜெயலட்சுமி தம்பதியர். ஜெயலட்சுமி முன்னாள் கவுன்சிலர். இத்தம்பதியரின் மகன் ஜோதிமுருகன் (30). சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் ஹோட்டல் நடத்தி வந்தார்.

நேற்று முன்தினம் இரவில் ஜோதி முருகன் தனது நண்பர்களுடன் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபம் அருகில் பேசிக் கொண்டிருந்தார். பின்னர் அவருடன் இருந்த நண்பர்கள் அருகில் உள்ள கடைக்கு பொருட்கள் வாங்க சென்றதாக தெரிகிறது.

அப்போது ஜோதி முருகன் செல்போனுக்கு அழைப்பு வந்ததாகவும், அவர் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபம் அருகே நடந்து சென்று கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அவ்வழியாக மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம கும்பல் ஜோதி முருகனை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பியோடிவிட்டது. இதில் பலத்த காயமடைந்த ஜோதிமுருகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது குறித்து தெரியவந்ததும் ஜோதி முருகனின் உறவினர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் அப்பகுதியில் குவிந்ததால் பரபரப்பு நிலவியது. காவல்துறையினர் அங்கு வந்து ஜோதி முருகனின் சடலத்தை கைப்பற்றி பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

காவல்துறை கண்காணிப்பாளர் மாதவன் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார். தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டன.

மோப்பநாயும் வரவழைக்கப்பட்டிருந்தது. கொலை செய்துவிட்டு தப்பியோடியவர்களை பிடிக்க காவல் துணை கண்காணிப்பாளர் செங்கோட்டு வேலவன் தலை மையில் தனிப்படை அமைக்கப் பட்டுள்ளது.

ஏற்கெனவே ஜோதி முருகன் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்தக் கொலை முன்பகை காரணமாக நடந்ததா என போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே ஜோதி முருகனின் மரணத்துக்கு காரண மானவர்களை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி அவரது உறவினர்கள் சங்கரன் கோவில் பேருந்து நிலையம் அருகே நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர்.

# தை மாத கடைசி வெள்ளிக்கிழமை: இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்



**விருதுநகர், பிப்.07:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகிலுள்ள இருக்கன்குடி மாரியம்மன் கோவில் தென் தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தமிழகம் முழுவதும் இருந்து ஆண்டு முழுவதும் ஏராளமான பக்தர்கள் வந்திருந்து அக்னி சட்டி, அழகு குத்துதல், அங்கப் பிரதட்சணம், ஆயிரம் கண் பானை, கரும்புத் தொட்டில், தேர் இழுத்தல், மொட்டை போடுதல் உள்ளிட்ட பல்வேறு நேர்த்தி கடன்களை செலுத்தி சாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் ஆடி, தை, பங்குனி, சித்திரை உள்ளிட்ட மாதங்களில் சிறப்பு விழாக்கள் நடைபெறும். இந்த காலகட்டங்களில் அதிக அளவிலான பக்தர்கள் வந்திருந்து அம்மனை தரிசனம் செய்வர்.

இந்த நிலையில் இன்று தை கடைசி வெள்ளி திருவிழாவை முன்னிட்டு திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில், புளியங்குடி கரிவலம்வந்தநல்லூர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். இதனால் இருக்கன்குடி மாரியம்மன் கோவில் ஆற்றுப்படுகையில் பக்தர்கள் கூட்டம் கடல்போல் காட்சி அளித்தது.

கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தி அம்மனை வழிபட்டனர். பக்தர்கள் கூட்டம் அலைமோதியதால் நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மனை தரிசனம் செய்து வருகின்றனர்.

இன்று தை கடைசி வெள்ளி திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் பூஜைகள் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் வசதிக்காக கோவில் நிர்வாகம் சார்பில் குழந்தைகளுக்கு பாலூட்டும் இடவசதி, குடிநீர் வசதி, தங்குமிட வசதி, கழிப்பிட வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல முன்னேற்பாட்டு வசதிகளை செய்திருந்தன. பக்தர்களின் பாதுகாப்பிற்காக சாத்தூர் டி.எஸ்.பி. குருசாமி தலைமையில் நூற்றுக்க ணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவிழா ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் ராமமூர்த்தி பூசாரி, கோவில் செயல் அலுவலர் இளங்கோவன் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# தமிழகத்தில் பெரும்பாலும் வறண்ட வானிலை நிலவக்கூடும்

## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, பிப்.07:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வட தமிழக கடலோர மாவட்டங்கள், நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிபேட்டை மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

8-ந்தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வட தமிழக கடலோர மாவட்டங்கள், நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

9 மற்றும் 10-ந்தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

11-ந்தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

12-ந்தேதி தென் தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதனிடையே இன்று முதல் 10-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒரிரு இடங்களில் 1-2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-31° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# மாமல்லபுரத்தில் சுற்றுலா பயணிகளை அச்சுறுத்தும் குரங்குகள்



**மாமல்லபுரம், பிப்.07:** மாமல்லபுரத்தில் தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் உள்ள அர்ச்சுனன் தபசு பின்புறம் வெண்ணை உருண்டைக்கல் பாறை வளாகத்தில் பல்வேறு குடவரை சிற்பத்தூண்கள், பாறை வடிவிலான குளியல் தொட்டிகள் என பல்லவர் காலத்து சிலைகள் கற்களுடன் கூடிய மலைப்பகுதி உள்ளது. இங்கு மயில், குரங்கு, கீரிப்பிள்ளை, உடும்பு உள்ளிட்ட பல்வேறு உயிரினங்கள் வாழ்கிறது.

இவை சில நேரங்களில் உணவுக்காக வெளியே ஊருக்குள் வரும்போது வாகனங்களில் அடிபட்டு இறப்பதும், வீடுகளுக்குள் புகுந்து உணவுகளை தின்னும் சம்பவங்களும் அடிக்கடி நடப்பது வழக்கம்.

தற்போது குரங்குகள் நகரப்பகுதியில் உள்ள கடை, வீடுகளில் உணவுக்காக மக்களையும், சுற்றுலா பயணிகளையும் பயமுறுத்தும் சம்பவம் நடக்கிறது.

இதுகுறித்து பொதுமக்கள் தொல்லியல்துறை அதிகாரிகளிடம் புகார் கொடுத்தால் அவர்கள் வனத்துறையிடம் கூறுங்கள் என சொல்வதாகவும், வனத்துறையினர் திருக்கழுக்குன்றம் அலுவலகத்தில் இருந்து மாமல்லபுரம் வந்து இவைகளை கண்காணிப்பது இல்லை எனவும் பொதுமக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதனால் வனத்துறை அதிகாரிகள் மாமல்லபுரம் வெண்ணை உருண்டைக்கல் பாறை வளாக மலைப்பகுதியை கண்காணித்து அங்கிருந்து குரங்குகள் நகருக்குள் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# உதகையில் பூஜ்ஜிய டிகிரி வெப்பநிலை

**உதகை, பிப். 7:** உதகை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வியாழக்கிழமை 0 டிகிரி வெப்பநிலை பதிவானதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், உதகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பா், டிசம்பா், ஜனவரி மாதங்களில் பனிக்காலம் என்பதால் பல்வேறு இடங்களில் உறைபனி காணப்படும். நீா் பனி தொடங்கிய அடுத்த ஒரு சில வாரங்களில் உறைபனி தொடங்கும். ஆனால் இந்த முறை வழக்கத்துக்கு மாறாக மஞ்சூா், குன்னூா் பகுதிகளில் கடந்த டிசம்பா் முதல் வாரம் உறைபனிப்பொழிவு தொடங்கியது.

உதகை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இரண்டாம் வாரத்தில் உறைபனி தொடங்கியது.

இந்நிலையில் உதகை தாவரவியல் பூங்கா பகுதியில் வியாழக்கிழமை 3.1 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியிருந்த சூழலில், குதிரை பந்தய மைதானம், காந்தல் பகுதியில் உறைபனியும், தலைகுந்தா, அவலாஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் 0 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் காணப்பட்டது.

இதன் காரணமாக காலை நேரத்தில் காய்கறி உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு செல்பவா்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

# வரி நிலுவையைச் செலுத்தாவிட்டால் ஜெயலலிதா சொத்துகள் ஏலம் விடப்படும்

## உயர்நீதிமன்றத்தில் வருமான வரித் துறை தகவல்





**சென்னை, பிப்.07:** மறைந்த முன்னாள் முதல்வா் ஜெயலலிதா செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் செல்வ வரி நிலுவையை வட்டியுடன் சோ்த்து ரூ.20 கோடி செலுத்த வேண்டியுள்ளதாகவும், வரி நிலுவையைச் செலுத்தாவிட்டால் முடக்கம் செய்யப்பட்ட சொத்துகளை ஏலம்விட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சென்னை உயா்நீதிமன்றத்தில் வருமான வரித் துறை தெரிவித்துள்ளது.

முன்னாள் முதல்வா் ஜெயலலிதாவின் சட்டபூா்வ வாரிசாக அவரது அண்ணன் மகள் ஜெ.தீபா மற்றும் மகன் ஜெ.தீபக் ஆகியோரை சென்னை உயா்நீதிமன்றம் அறிவித்தது. எனவே, ஜெயலலிதாவின் வருமான வரி நிலுவைத் தொகையான ரூ.36.56 கோடியை 7 நாள்களுக்குள் செலுத்த வேண்டும் என்று இருவருக்கும் வருமான வரித் துறை கடந்த ஜூலை 23-ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பியது.

இந்த நோட்டீஸை எதிா்த்து ஜெ.தீபா தொடா்ந்த வழக்கை விசாரித்த உயா்நீதிமன்றம், நோட்டீஸுக்கு தடை விதித்து உத்தரவிட்டது.

இதையடுத்து, நோட்டீஸை திரும்பப் பெற்ற வருமான வரித் துறை, வருமான வரி நிலுவைத் தொகையை ரூ.13.69 கோடியாகக் குறைத்து மீண்டும் நோட்டீஸ் அனுப்பியது. புதிய நோட்டீஸை எதிா்த்து ஜெ.தீபா சென்னை உயா்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாா். அதேபோல், ஜெ.தீபக், தனது வரி நிலுவைத் தொகையை தவணை முறையில் செலுத்தி வருவதாகக் கூறி மனு தாக்கல் செய்திருந்தாா்.

இந்த வழக்கில் வருமான வரித் துறை பதிலளிக்க உத்தரவிட்ட உயா்நீதிமன்றம், அதுவரை வரி நிலுவைத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், ஜெயலலிதா செலுத்த வேண்டிய வரி பாக்கி குறித்து வருமான வரித் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 2026 ஜன. 31-ஆம் தேதி வரையிலான காலகட்டத்துக்கு வட்டியுடன் சோ்த்து வருமான வரி நிலுவை ரூ.9 கோடியே 17 ஆயிரத்து 962-ஆக உள்ளது. செல்வ வரி நிலுவை ரூ.11 கோடியே 8 லட்சத்து 8 ஆயிரத்து 730 செலுத்தப்பட வேண்டும்.

ஜெயலலிதாவின் வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள ஜெ.தீபக், ரூ.6.75 கோடியை ஆறு தவணைகளாகச் செலுத்துவதாகக் கூறி, ரூ.1.12 கோடி செலுத்தியுள்ளாா். இந்த வரி நிலுவைத் தொகைக்காக ஜெயலலிதா இருந்தபோதே, சில சொத்துகள் முடக்கப்பட்டன. எனவே, வரி பாக்கித் தொகையைச் செலுத்தாவிட்டால், முடக்கப்பட்ட சொத்துகளை ஏலம்விட சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு வரும் பிப். 18-ஆம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

# மின் இணைப்பு வழங்க லஞ்சம்: மின்வாரிய அதிகாரி கைது!





**ஆவடி, பிப்.07:** ஆவடியில் மின் இணைப்பு வழங்க ரூ.15,000 லஞ்சம் வாங்கிய வழக்கில் மின்வாரிய வருவாய் மேற்பார்வையாளரை ஊழல் தடுப்புத்துறை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஆவடி கோவில்பதாகை பொண்ணப்பிள்ளை நகரைச் சேர்ந்தவர் விவசாயி ராகவன் (47).

இவர் இதே பகுதியில் புது வீடு கட்டி வருகிறார். இந்த வீட்டிற்கு மின் இணைப்பு கோரி கோவில்பதாகை மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார்.

இதனை பரிசீலனை செய்த மின்வாரிய வருவாய் மேற்பார்வையாளர் சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் (47) என்பவர், மின் இணைப்பு வழங்க ரூ.15,000 லஞ்சம் தர வேண்டும் என ராகவனிடம் கேட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த ராகவன், பணத்தை கொடுக்க விரும்பாமல் திருவள்ளூர் ஊழல் தடுப்புத்துறை போலீஸாரிடம் புகார் அளித்தார். காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் போலீஸார் ரசாயன பவுடர் தடவிய லஞ்சப் பணத்தை ராகவன் கொடுத்து பாலசுப்பிரமணிடம் கொடுக்குமாறு அறிவுறுத்தினர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ராகவன் கோயில்பதாகை மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று பாலசுப்பிரமணியனிடம் லஞ்சப் பணத்தை கொடுத்துள்ளார்.

அதனை அவர் வாங்கிய போது, மறைந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயக்குமார், ஆய்வாளர் மாலா ஆகியோர் தலைமையில் போலீஸார் கையும் களவுமாக பாலசுப்பிரமணியத்தை கைது செய்தனர். தொடர்ந்து போலீஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கூடா நட்பு கேடு தரும்! கோவை கல்லூரி மாணவிகளுக்கு நடந்த கொடூரம்

**கோவை, பிப்.07:** உன்னுடைய நண்பர்கள் யார் என்று சொல். நான் உன்னை பற்றி சொல்கிறேன் என்று ஒரு பழமொழி உண்டு.

எனவே தோழனையோ தோழியையோ தேர்வு செய்யும் போது எப்படி இருக்க வேண்டும் என்பதை கோவையில் நடந்த சம்பவம் மீண்டும் அனைவருக்கும் எடுத்துக்காட்டி உள்ளது. கோவையில் உள்ள ஒரு கல்லூரியில் படிக்கும் 4 மாணவிகள் தோழிகளாக பழகி வந்தனர். அந்த மாணவிகளில் 2 மாணவிகள், 2 வாலிபர்களை காதலித்து வந்தனர்.

அந்த 2 மாணவிகளின் காதலர்கள், தங்களது காதலிகளிடம் அவர்களுடன் படிக்கும் சக மாணவிகள் குறித்து விசாரிப்பது வழக்கம். அப்போது மாணவிகள் 2 பேரும் தங்களது காதலர்களிடம் சில பணக்கார மாணவிகள் குறித்த விபரங்களையும் பரிமாற்றம் செய்துள்ளனர். இந்த விபரங்களை அறிந்து கொண்ட அந்த வாலிபர்கள், பணக்கார மாணவிகளின் விபரத்தை அனுப்பி வைக்கும்படி செல்போனில் தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன்படி 2 காதலிகளும், அந்த 2 மாணவிகளின் புகைப்படங்களையும், அவர்களது செல்போன் எண்களையும், தங்களது செல்போனில் இருந்து தங்களது காதலர்களின் செல்போனுக்கு அனுப்பியுள்ளனர்.

புகைப்படம் மற்றும் செல்போன் எண்ணை பெற்றுக்கொண்ட அந்த வாலிபர்கள், மாணவிகளின் புகைப்படத்தை அவதூறாக மார்பிங் செய்துள்ளனர். தொடர்ந்து மார்பிங் செய்யப்பட்ட அந்த புகைப்படத்தை சம்பந்தப்பட்ட மாணவிகளின் செல்போனுக்கு அனுப்பி பணம் கேட்டு மிரட்ட தொடங்கி உள்ளனர்.

இதை பார்த்த அந்த மாணவிகள் அதிர்ச்சி அடைந்தனர். அப்போது அந்த வாலிபர்கள் அவர்களிடம் இந்த புகைப்படங்களை இணையதளத்தில் வெளியிடாமல் இருக்க வேண்டும் என்றால் நாங்கள் கேட்கும் பணத்தை தர வேண்டும் என கேட்டு மிரட்டினர். இதனால் அதிர்ச்சியான மாணவிகள், தங்கள் புகைப்படம் எப்படி இவர்களின் கைகளுக்கு கிடைத்தது என விசாரித்தனர். அப்போது தான் அவர்களுக்கு பெரும் அதிர்ச்சி தகவல் காத்திருந்தது. தங்களுடன் இவ்வளவு நாட்கள் தோழிகளாக பழகிய சக மாணவிகளே இந்த செயலில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதையடுத்து அந்த மாணவிகள் கோவை மாவட்ட போலீசில் புகார் அளித்தனர். இந்த சம்பவம் குறித்து கருமத்தம்பட்டி அனைத்து மகளிர் போலீஸ் நிலைய போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது தோழிகளாக நடித்து சக கல்லூரி மாணவிகளே 2 தோழிகளையும் சிக்கலில் சிக்க வைத்தது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அந்த மாணவிகள் மற்றும் வாலிபர்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் அந்த வாலிபர்கள் இதுபோன்று வேறு மாணவிகளையும் மிரட்டி பணம் பறித்துள்ளனரா? அல்லது வேறு வகையில் அவர்களை தவறாக பயன்படுத்தினார்களா? என்பது குறித்தும் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் கோவையில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## காட்பாடி வரசித்தி விநாயகர் கோவிலில் சங்கடஹர சதுர்த்தி விழா!



வேலூர் மாவட்டம் , காட்பாடி வள்ளிமலை கூட்டுரோடு அருகில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் பெப்ரவரி மாத சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது. இதையொட்டி ஸ்ரீவரசித்தி விநாயகருக்கு பல்வேறு வகையான திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து மலர் மாலை, வெட்டிவேர் மாலை, அருகம்புல் மாலை, பட்டுவஸ்திரம் அணிவித்து மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. அதையடுத்து சுவாமிக்கு தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைகளை பிரம்மபுரம் ஸ்ரீ ஜெயக்குமார் அர்ச்சகர் விமரிசையாக செய்திருந்தார்.

## மானாமதுரை திருப்புவனம் பகுதியில் சங்கடஹர சதுர்த்தி வழிபாடு





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தரபுரம் தெருவில் உள்ள பம்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் தை மாத சங்கடஹர சதுர்த்தி பூஜை வழிபாடு நடைபெற்றது. முன்னதாக சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு வன்னிமர இலை அருகம்புல்யிட்டு சிறப்பு பாராயணம் ,தீபாராதனை நடைபெற்றது. இதேபோல் திருப்புவனம் பஸ்நிலையத்தில் உள்ள பம்ரீ மணிமந்தர விநாயகர் கோவிலில் பதினாறு வகையான அபிஷேகம் செய்து தேங்காய் மாலை சாந்தி சிறப்பு வழிபாடு பூஜைகள் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## சாத்தூர் அருகே அந்தியோதயா ரயில் என்ஜின் பழுது: பிற ரயில்கள் வழியில் நிறுத்தி வைப்பு



**சாத்தூர், பிப்.07:** சாத்தூா அருகே அந்தியோதயா எக்ஸ்பிரஸ் ரயில் என்ஜின் பழுதாகி நின்றதால், கோவில்பட்டி, மணியாச்சி, கடம்பூா உள்ளிட்ட ரயில் நிலையங்களில் பிற ரயில்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.

நாகா்கோவில்-தாம்பரம் அந்தியோதயா எக்ஸ்பிரஸ் (20692) என்ஜினில் பழுது ஏற்பட்டதால், சாத்தூா-துலுக்கப்பட்டி ரயில் நிலையம் இடையே மாலை 6.25 மணி முதல் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால், தூத்துக்குடி-மைசூரு (16235) விரைவு ரயில் மாலை 6.50 மணி முதல் சாத்தூா ரயில் நிலையத்திலும், கன்னியாகுமரி-தாம்பரம் (22658)வாராந்திர சிறப்பு விரைவு ரயில் இரவு 7.45 மணி முதல் கோவில்பட்டி ரயில் நிலையத்திலும், கொல்லம்-சென்னை எழும்பூா (20636) அனந்தபுரி விரைவு ரயில் இரவு 7.45 மணி முதல் கடம்பூா ரயில் நிலையத்திலும், கன்னியாகுமரி-சென்னை (12634)இடையேயான கன்னியாகுமரி விரைவு ரயில் இரவு 8.30 மணி முதல் மணியாச்சி ரயில் நிலையத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டது.

ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினா.

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு.......







சென்னை சோழிங்கநல்லூர் -119 புதிய குமரன் நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ விஜய கணபதி சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், பால், தயிர்,சந்தனம், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், கலசம் ஆலயம் சுற்றி வந்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, கலச நீர் ஊற்றி அபிஷேகங்கள் செய்யப்பட்டது. வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள்,அருகம்புல் மாலைகளால் அலங்கரித்து, சங்கல்பம் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சங்கடஹர சதுர்த்தி பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ விஜய கணபதியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## சங்கடஹர சதுர்த்தி பூஜை...





திருவண்ணாமலை மாவட்டம் பிப்ரவரி -5 கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ விநாயகர் பெருமானுக்கு சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், பால் தயிர் சந்தனம் பஞ்சாமிர்தம், தேன், இளநீர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள்,அருகம்புல் மாலைகளால் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சங்கடஹர சதுர்த்தி பூஜையில் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## பிப்.13-ல் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூடுகிறது!

**புது தில்லி, பிப்.07:** காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

தமிழகம், கா்நாடகம் இடையே காவிரி நதி நீா் பங்கீட்டு பிரச்னை பல ஆண்டுகளாக நிலவி வந்த நிலையில் இது தொடா்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு தீா்ப்பு வழங்கியது. அப்போது கா்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீா தமிழகத்திற்க்கு வழங்க வேண்டும் என்பதை அத்தீா்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிா்ணயம் செய்தது. அந்த தீா்ப்பை அமல்படுத்தவும், காவிரி நீா பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீா் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீா் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்ச நீதிமன்றம் அமைத்தது.

அதன்படி இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நதி நீா் பங்கீடு தொடா்பாக உச்சநீதிமன்ற தீா்ப்பின் அடிப்படையில் உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றன

காவிரி நீா் மேலாண்மை ஆணையத்தின் 47 வது கூட்டம் ஜனவரி 6 ஆம் தேதி நடைபெற்றது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு ஜனவரி மாதம் 2.76 டிஎம்சி தண்ணீா் திறந்துவிட வேண்டும் என காவிரி நீா



மேலாண்மை ஆணையம் அந்த கூட்டத்தில் கா்நாடகாவுக்கு ஆணையிட்டது

இந்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

காவிரி நீா் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம், அதன் தலைவா் எஸ்.கே. ஹல்தாா தலைமையில் தில்லியில் உள்ள அந்த ஆணையத்தின் அலுவலகத்தில் பிப். 13 ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளது

இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழகம், கா்நாடகம் ,கேரளம் மற்றும் புதுச்சேரி நீா்வளத்துறை அதிகாரிகளுக்கு காவிரி நீா மேலாண்மை ஆணையம் தகவல் அனுப்பியுள்ளது.

காவிரியில் இருந்து மாதாந்திர நீா் திறப்பு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது

காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீா்ப்பின்படி கா்நாடகம் தமிழகத்திற்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை உறுதி செய்வதற்காக இக்கூட்டம் நடைபெறுகிது

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தொடா்பான விவகாரத்தில் கா்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை மீது காவிரி நீா் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீா் முறைப்படுத்தும் குழு மற்றும் தமிழகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விளக்கத்தின் அடிப்படையில் மத்திய நீா்வள ஆணையம் இறுதி முடிவு எடுக்கும் என கடந்த ஆண்டு 2025 நவம்பா 13 ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது




## காங்கிரசை இழிவுபடுத்தும் போக்கு தொடர்வது நல்லதல்ல- மாணிக்கம் தாகூர் எம்.பி. பரபரப்பு அறிக்கை

**சென்னை, பிப்.07:** தமிழ்நாட்டை போலவே புதுவையிலும் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மனஸ்தாபங்கள் பிரச்சனையை உருவாக்கி உள்ளது.

புதுவையை பொறுத்தவரை காங்கிரஸ் கட்சிதான் கூட்டணி கட்சிகள் கூட்டத்தை கூட்டி தொகுதிப் பங்கீடு உள்ளிட்ட விவகாரங்களை பேசும்.

ஆனால் இந்த முறை கடந்தசில தினங்களுக்கு முன்பு தி.மு.க. எம்.பி. ஜெகத்ரட்சகன் தலைமையில் கூட்டணி கட்சிகள் கூட்டம் கூட்டப்பட்டது. அந்த கூட்டத்துக்கு காங்கிரசுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

இதனால் புதுவையில் கூட்டணிக்கு தலைமை தாங்குவது யார் என்பதில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் தி.மு.க. செயல்பாட்டுக்கு நாராயணசாமி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

புதுச்சேரி அரசியல் களத்தில் கூட்டணி குறித்த விவாதங்கள் சூடுபிடித்து உள்ள நிலையில், காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தனது எக்ஸ் தளத்தில் எழுப்பி உள்ள கேள்விகள் புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. 2014 லோக்சபா தேர்தல் முடிவுகளைச் சுட்டிக்காட்டி, கூட்டணியில் எந்தக் கட்சிக்கு தலைமை தாங்கும் தகுதி உள்ளது என்பது போன்ற கேள்விகளை அவர் எழுப்பி உள்ளார்.

அவரது எக்ஸ் தள பதிவில், “கூட்டணியில் 8 சதவீதம் வாக்கு வைத்து உள்ள கட்சி தலைமை தாங்குமா அல்லது 26 சதவீதம் உள்ள கட்சி தலைமை தாங்குமா? ஏன் கூட்டணியில் காங்கிரஸ் கட்சியை இழிவாக பேச வேண்டும்? தொடரும் இந்த முறை நல்லது இல்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2014-ம் ஆண்டு புதுச்சேரி லோக்சபா தேர்தலில், அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஆர். ராதா கிருஷ்ணன், இந்திய தேசிய காங்கிரஸின் வேட்பாளர் வி.நாராயணசாமியை தோற்கடித்து வெற்றி பெற்றார். ராதாகிருஷ்ணன் 2,55,826 வாக்குகளைப் பெற்று, 34.57 சதவீதம் வாக்கு சதவீதத்துடன் முதலிடத்தைப் பிடித்தார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நாராயணசாமி 1,94,972 வாக்குகளைப் பெற்று (26.35 சதவீதம்) 2-ம் இடத்தைப் பிடித்தார். அ.தி.மு.க. வேட்பாளர் எம்.வி.ஓமலிங்கம் 1,32,657 வாக்குகளுடன் (17.93 சதவீதம்) மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

தி.மு.க. வேட்பாளர் ஏ.எம்.எச். நஸீம் 60,580 வாக்குகளைப் பெற்று (8.19 சதவீதம்) நான்காம் இடத்தைப் பிடித்தார். இந்த புள்ளி விவரங்களை பதிவு செய்து மாணிக்கம் தாகூர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வருகிற சட்டமன்றத் தேர்தல்களில், அதிக வாக்கு வங்கியைக் கொண்ட காங்கிரஸ் கட்சியை விட, குறைந்த வாக்கு வங்கியைக் கொண்ட தி.மு.க கூட்டணியில் தலைமை வகிக்க முயற்சிப்பதாக மறைமுகமாக அவர் சாடியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியை கூட்டணியில் இழிவாகப் பேசும் போக்கு தொடர்வது நல்லதல்ல என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டு உள்ளார்.

தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்று மாணிக்கம் தாகூர் ஏற்கனவே வலியுறுத்தி வருகிறார். இந்தநிலையில், புதுச்சேரியில் கூட்டணி தலைமை குறித்த மாணிக்கம் தாகூரின் கருத்து, புதுச்சேரி மற்றும் தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

## தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற முடியாது - கி.வீரமணி

**தருமபுரி, பிப்.07:** தருமபுரியில் திராவிடர் கழகம் சார்பில் நிதியளிப்பு கூட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற திராவிட கழக தலைவர் கி.வீரமணி, ‘இதுதான் ஆர்.எஸ்.எஸ்-பா.ஜ.க. ஆட்சி, இதுதான் திராவிடம்-திராவிட மாடல் ஆட்சி’ என்ற தலைப்பில் மேலும் பேசியதாவது:-

தமிழகத்தில் திராவிட இயக்கமும், திராவிட மாடல் ஆட்சியும் இல்லை என்றால், நாம்யாரும் தலை நிமிர்ந்து நடக்கமுடியாது.

குற்றப்பரம்பரை என ஒரு பிரிவு இருந்ததை, சீர்மரபினர் என முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி தான் மாற்றினார்.

அதேபோல திருநங்கைகள், பெண்களுக்கான அங்கீகாரத்தை அளித்தது திராவிட மாடல் ஆட்சிதான். எங்கெல்லாம் அநீதி ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் சமூக நீதி வேண்டும் என்பதற்கு தான் டாக்டர் அம்பேத்கர் அரசியலமைப்பு சட்டத்தை இயற்றினார்.

தமிழக்தின் கவர்னர் எதிர்க்கட்சிகளை போல வெளிநடப்பு செய்கிறார். இவை சட்டப்படி தவறு. எனவே தான் அடுத்த ஆண்டு முதல் சட்டப் பேரவையில் கவர்னர் உரையே இருக்காது என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு எத்தனை முறை பிரதமர் மோடி வந்தாலும், பா.ஜ.க.வால் ஏதும் செய்ய இயலாது. மண், மக்களை பாதுகாக்க திராவிட மாடல் ஆட்சிதான் தமிழகத்தில் மீண்டும் வரவேண்டும் என்றார்.

## விஜயகாந்த் நினைவிடத்தில் வழிபாடு செய்து விருப்ப மனு விநியோகத்தை தொடங்கி வைத்த பிரேமலதா

**சென்னை, பிப்.07:** 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. சட்டசபை தேர்தலுக்கான கூட்டணியை இன்னும் இறுதி செய்யாத நிலையில் 234 தொகுதிகளுக்கும் விருப்ப மனு பெறும் பணியை தே.மு.தி.க. இன்று தொடங்கியது.

தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புவோரின் விருப்ப மனுக்களை பெறும் முன், விஜயகாந்த் நினைவிடத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வழிபாடு செய்தார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும், புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்ற தொகுதியிலும் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புகின்ற அனைத்து நிர்வாகிகளும், தொண்டர்களும் சட்டமன்ற பொதுத்தேர்தல் விருப்ப மனுக்களை இன்று முதல் 12-ந் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2026 சட்டமன்ற தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடுவதற்குரிய விருப்ப மனு அளிப்பதற்கு தே.மு.தி.க.வின் நிர்வாகிகளாக இருப்பவர்களும், கட்சியின் அடிப்படை உறுப்பினர்களாக இருப்பவர்களும் தகுதியானவர்கள் ஆவர். மேலும், தமிழக சட்டமன்ற பொதுத்தொகுதிக்கான விருப்ப மனு கட்டணமாக ரூ.15 ஆயிரமும், தனித்தொகுதிக்கான விருப்ப மனு கட்டணமாக ரூ.10 ஆயிரமும், புதுச்சேரி சட்டமன்ற பொதுத்தொகுதிக்கான விருப்ப மனு கட்டணமாக ரூ.10 ஆயிரமும், தனித்தொகுதிக்கான விருப்ப மனு கட்டணமாக ரூ.5 ஆயிரம் செலுத்தி விருப்ப மனுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விருப்ப மனுக்களை 12-ந் தேதி மாலை 5 மணிக்குள் தலைமை கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com